கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

23-6-1974


40 காசு




பிலிப்ஸ் ஃப்ளூரோஸென்ட் லாம்புகளில் ஓரங்கள் கறுப்பதைத் தடுப்பது எது?

ஃப்ளூரோஸென்ட் லாம்புகளில் ஓரங்கள் கறுத்துவிட்டால் ஒளித்திறன் குறைந்து பார்ப்பதற்குக் கவர்ச்சி யற்றதாகத் தோற்ற மளிக்கும். காரணம்? எமிட்டர் பேஸ்ட் கணங்கள். இவை லாம்ப் பொருத்திய வுடன் தெறித்துக் குழலின் மேற் புறத்தில் படிந்து விடுகின்றன. ஆனால் பிலிப்ஸ் லாம்புகளில் இது ஏற்படுவதில்லை. அதுவே தெறிக்கும் எமிட்டர் கணங்களைப் பிடிக்கும் சாதனம் இருப்பதின் விசேடம். இது எலெக்ட்ரோடு களைச் சுற்றியுள்ள ஒரு வளையமாகும். எமிட்டர் பேஸ்ட் கணங்கள் தெறிக்கும் போது அவை லாம்பின் மீது படி வதைத் தடுத்து விடுகிறது. அதனால் ஓரங்கள் கறுப்பது தடுக்கப்பட்டு ஒளிக் கதிர்களின் திறன் மிகச்சீரான நிலையில் இருக்கின்றன. இது தான் மற்ற எந்த ஃப்ளூரோஸென்ட் லாம்பிலும் இல்லாத ஒரு விசேட அமைப்பு.

எலெக்ட்-ரோடுகளைச் சுற்றியுள்ள ஆனோட்ரிங்.





பிலிப்ஸ் ஃப்ளூரோஸென்ட் லாம்புகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வது லாபமளிக்கிறது.

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்


OBM-1898-TM

பால் குடிக்க மறுக்கும் பிள்ளைக்கு பல்சுவையுள்ள கஸ்டர்டு தாருங்கள். அது அள்ளிப் பருகுவதைப் பாருங்கள்!





உங்கள் பிள்ளை பால் குடிக்க மறுக்கிறதா? கவலைப்படாதீர்கள். அதற்கு இன்சுவையுள்ள ஊட்டமிக்க கஸ்டர்டு தாருங்கள். அது மகிழ்வுடன் சாப்பிடும். அதைத் தயாரிக்கும் முறை மிகவும் எளிது. 4 தேக்கரண்டியளவு பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுதுபோல் ஆக்குங்கள். பிறகு ஒரு கோப்பை பாலை சூடாக்கி, அதில் இந்த விழுதைக் கரையுங்கள். கொதிக்கும் வரை கிளறுங்கள். பின்னர் நெய்தடவிய தட்டில் ஊற்றுங்கள். அது குளிர்ந்து படியட்டும். நாள்தோறும் உங்கள் பிள்ளைக்குப் பால் கொடுக்கும் சுவையான வழி இது!



பழ ஸாலடைக் கிண்ணத்தில் எடுத்து, கஸ்டர்டால் அலங்கரியுங்கள். இப்போது கேக்கின் மீது கஸ்டர்டு தடவி, சுவையைக் கூட்டுங்கள். ஜெல்லியின் மீது கஸ்டர்டு தடவிப் பாருங்கள். எல்லாம் சுவைமயம்! இத்தகைய கஸ்டர்டு தயாரிக்க, 1½ தேக்கரண்டி பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுது போல் ஆக்குங்கள். ஒரு கோப்பை பாலை சூடாக்குங்கள். அதில் கஸ்டர்டு பவுடர் விழுதைக் கரைத்து, கொதிக்கும் வரை கிளறுங்கள். அதை சூடாகவோ, குளிர்ந்ததாகவோ உங்கள் பிள்ளைக்குத் தாருங்கள். சுவையோ சுவை!



ஒரு விசேஷ முறை: நீங்கள் வீட்டிலேயே ஐஸ்க்ரீம், புட்டிங், பாயசம், ரபடி தயாரித்தால், பாலைக் கெட்டியாக்க பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரையும் சேர்க்கவும். ஒவ்வொரு தித்திப்பும் இரட்டிப்பு சுவை தரும்! இதற்கு வெரய்டி கஸ்டர்டு பவுடரை உபயோகியுங்கள். வனில்லா, ஆரஞ்சு, பனானா, ஸ்ட்ராபெர்ரி, லெமன், ரஸப்பெர்ரி, ஆகிய 6 கனிச்சுவையுள்ள கஸ்டர்டு பவுடர்கள் உள்ளன.




அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப் படுத்தப்பட்டதால், கஸ்டர்டு பவுடர்களிலேயே மிகச் சிறந்தது பிரவுன் & போல்ஸன். ஒரு டின் கைவசம் இருக்கட்டும்...எப்போதுமே!


கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரை. லிட்.
பம்பாய்-400 001.

பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர்



கண்கண்ட தெய்வம் என்று நாம் மட்டுமின்றி உலகத்தின் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் வணங்குகிற பெரிய மகான் காஞ்சீபுரத்தில் வாழ்கிறார். உங்கள் வீட்டிலும் "பெரியவாள், பெரியவாள்" என்று இவர்களது படத்தை வைத்துப் பூஜை செய்து கொண்டிருப்பீர்கள். காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள் என்னும் இப்பெரியவர்கள் அவதாரம் செய்து இந்த ஜூன் நாலாம் தேதியுடன் எண்பதாண்டுகள் நிறைந்தன. உங்கள் எல்லோரின் எதிர்காலம் நலமுற எப்போதும் ஆசீர்வாதம் செய்து கொண்டிருக்கும் அன்பு வடிவான பெரியவர்களின் திருவுருவத்தை இங்கு வழங்குவதில் பெருமை கொள்கிறோம். மாணவர்களுக்கென்றே பெரியவர்கள் வழங்கிய அருள் உபதேசத்தை அடுத்த இதழில் படிக்கப்போகிறீர்கள். அன்புக் குழந்தைகளே! நீங்கள் அதன்படி நடந்து, உங்களை உயர்த்திக் கொள்ளுங்கள்.





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

கோகுலம்

மலர் 3 □ இதழ் 6
ஜூன் 23, 1974
ஆனந்த, ஆனி, 9
□
சந்தா விவரம்:
உள் நாடு:

ஒரு வருடம்	ரூ. 10-00
ஆறு மாதம்	ரூ. 5-00

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 25-00

மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031

அட்டையில்:

"எனக்குமேலே வரி போட்டு கணக்கவெச்சது யாரு ?"



வண்ணப்படம்:
தேவதாஸ் 'குஸாம்'



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

சிந்தூர விநாயகர்

முன்னொரு கற்பத்தில் சத்தியலோகத்தில் பிரம்மதேவர் கொட்டாவி விட்டார். அக்கொட்டாவியில் இருந்து ஒருவன் பிறந்தான். அப்போது மூவுலகங்களிலும் உதிர மழை பொழிந்தது. அவன் செம்பரத்தைப் பூவைப்போன்ற நிறத்தையும், பத்துத் தலைகளையும், விண்ணளவு ஓங்கி வளர்ந்த உடம்பையும், காமனைப் போன்ற கட்டழகையும் உடையவனாய் நின்றான்.

அவனைக் கண்டு நான்முகக் கடவுள் ''நீ யார்?'' என்றார். அவன் ''நான் முகத்தில் தோன்றியதனால் உமது மகன். நான் வாழ்வதற்கு ஓர் இடத்தைக் காட்டுக'' என்றான். பிரமதேவர் ''மகனே! நீ சிவப்பு நிறமுடையவனாக இருப்பதனால் சிந்தூரன் என்று பெயர் பெறுவாய். உனக்குரிய இடத்தை நீயே தேடிக்கொள். திருமால் முதலிய எவராலும் உனக்கு அச்சம் உண்டாகாது. நீ சினத்துடன் இரு கரங்களால் யாரைத் தழுவினாலும் அவர்கள் நீறாகி அழிவார்கள். தேவர்கள் விடுகின்ற ஆயுதங்களால் உனக்கு அழிவு வராது'' என்று பல வரங்களைக் கொடுத்தார். சிந்தூரன், ''தந்தையே! பாடுபடாதவனுக்குப் பணம் கிட்டியது போல் தவம் செய்யாத எனக்கு இத்தனை வரங்களைத் தந்தீர்கள். வரம் பலிக்கின்றதா என்று நான் பார்க்க விரும்புகிறேன். உம்மையே என் கரங்களால் தழுவுவேன்'' என்று பாய்ந்து வந்தான். அப்போது அகில உலகங்களும் நடுங்கின. கடல்கள் கொந்தளித்தன. எண் மலைகளும் பொடிபட்டன. உடுக்குலங்கள் உதிர்ந்தன.

பிரமதேவர் பெரிதும் அஞ்சினார். ''பாதகனே! வளர்த்த கடா மார்பில் பாய்வது போல் வரம் தந்த என்னையே தழுவிக் கொள்ள வந்தனையா? உன்மீது குற்றமில்லை. உன் குணமறியாது வரம் தந்த என்மீதுதான் குற்றம். நீ விநாயகப் பெருமானால் அழிந்து ஒழிவாயாக'' என்று சாபமிட்டார். பிரமதேவன் அஞ்சி வைகுண்டத்துக்கு ஓடினார். திருமாலைப் பணிந்தார். நடந்தவைகளைக் கூறினார்.

நாராயணர், ''நான்முகனே! ஆராய்ந்து செய்யாத காரியம் இப்படி அச்சத்தைத்தான் தரும். அவனை என்னாலும் கொல்ல முடியாதே. உலகங்கட்குப் பெருந் துயரம் விளையும். மறைநெறி மறையும். நெறிமுறைகள் மாறுபடும். இந்த இடர்க்கு நாம் என்ன செய்வோம்'' என்று கூறிக் கொண்டிருக்கும் போதே, சிந்தூரன், ''கருமாலே! நீ என்னுடன் போருக்கு வா. இல்லையேல் உன்னையும் பிரம்மனையும் தழுவி, நீறாக்கி விடுவேன்'' என்று கர்ஜித்தான்.

நாராயணர் தமது அச்சத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் ''அப்பா! சிந்தூரனே! நீ உனக்கு ஒப்பான வீரர்களுடன் போர் புரிவதுதான் வீரம். நான் ஆலிலைமேல் ஒன்றிக் கொண்டிருப்பவன். பிரமன் மலர்மீது இருப்பவன். துரும்புகளுடன் இரும்பு எதிர்க்கலாமா? உன் வீரத்துக்கு இது அழகன்று. நாங்கள் மிகவும் எளியவர்கள். உன்னுடன் போரிட வல்லவர் சிவபெருமான் ஒருவர்தான். அவர் உலகங்களையெல்லாம் அழித்தொழிப்பவர். அவர் திரிபுரம் எரித்தவர். காமனைப் பொடித்தவர். மேரு என்ற வில் பிடித்தவர். காளியுடன் நடித்தவர். மழுவைக் கையில் பிடித்தவர். ஆலகாலத்தைக் குடித்தவர். அந்தகாசுரனை மடித்தவர். அவரிடம் போ. அதனால் புகழ் ஓங்கும்'' என்றார்.

சிந்தூரன் சிரித்து, நிலத்தை மிதித்தான். மதுவுண்ட வெறியன் போல் குதித்தான். திருக்கயிலாய மலைக்குச்




சென்றான். சிவபெருமான் யோகியாக வீற்றிருந்தார். சிந்தூரனுடைய கொடுமையைக் கண்டு அம்பிகை அஞ்சினார். அப்போது கணேசமூர்த்தி தோன்றினார். ''அடேய், சிந்தூரனே! சற்று நில்!'' என்றார்.

சிந்தூரன், ''ஏ, குழந்தாய்! வீணே என் கையில் மாண்டு போகாதே. நான் அயனையும் அரியையும் வென்றவன். மலைகளைப் பொடியாக்கித் தின்றவன். என் முன் நிற்காதே. ஓடிப் போ!'' என்று வீரமொழி விளம்பினான்.

குழந்தை என்று ஏளனமாகப் பேசிய அவன் முன் விநாயகர் விசுவரூபத்துடன் நின்றார். அண்டங்கள் யாவும் அவருடைய அடி மலரில் அடங்கின. அப்பேருருவைக் கண்டு சிந்தூரன் அஞ்சினான். விநாயகர் தமது துதிக்கையால் அவனைப் பிடித்துக் குழைத்துத் தமது மத்தகத்தில் பூசிக் கொண்டார். அமரர்கள் அலர் மழை பொழிந்தார்கள். அவனுடைய உயிர் விநாயகருடைய திருவடியில் சேர்ந்தது. தேவர்களின் துயரம் தீர்ந்தது.

சிந்தூரனைச் சிந்தூரமாகத் தரித்ததனால் சிந்தூர விநாயகர் என்று பேர் பெற்றார். எல்லோரும் சிந்தூர விநாயகரை வழிபட்டனர்.





கையெழுத்தா, அச்செழுத்தா?


கண்கள் பூத்துப்போய் விட்டன. கையெழுத்துப் போட்டிக்காக நீங்கள் அனுப்பியிருந்த கடிதங்களைப் பார்த்துத் தான்! இத்தனை அழகு அழகாக நீங்கள் எழுதக்கூடியவர்கள் என்று தெரிந்திருந்தால் உங்களை இப்படிச் சோதித்திருக்க மாட்டோம்.

போட்டிக்கு வந்த கடிதங்கள் ஏராளம், ஏராளம்! அவைகளை வகுப்பு வாரியாகப் பிரிப்பதற்குள் என்பாடு உன்பாடு என்றாகி விட்டது. எல்லாருமே அழகாக, குண்டு குண்டாக, அச்சடித்தாற் போல் எழுதியிருந்தீர்கள். போட்டி உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத்தான் என்றாலும் முதல் வகுப்பில் படிக்கும் குழந்தைகள் கூட இப்போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பது விசேஷமில்லையா? இத்தனை குழந்தைகள் கலந்துகொண்டிருக்கும்போது ஒரே ஒரு பரிசு கொடுத்தால் மற்றவர்களுக்குக் கோபமும் அழுகையும் வருமே என்று ஒவ்வொரு வகுப்புக்கும் இரண்டு பரிசுகள் வழங்குவதென்று முடிவு செய்தோம். ஆறாம் வகுப்பிலிருந்து பதினொன்றாம் வகுப்பு வரை ஆறு முதல் பரிசுகளும் ஆறு இரண்டாம் பரிசுகளும் வழங்கியிருக்கிறோம். முதல் பரிசு ஒரு வருஷத்துக்கு கோகுலம் இதழ்களும் இரண்டாம் பரிசு ஆறு மாதத்துக்கு கோகுலமும் அளிப்பதென்று முடிவு செய்தோம். எதற்குப் பரிசு கொடுப்பதென்று தீர்மானம் செய்வதற்குள் திக்குமுக்காடிப் போனோம். பரிசுக்குரிய கையெழுத்துக்களைத் தேர்ந்தெடுப்பதில் சென்னை தியாகராயநகர் ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளி (மெயின் கிளை) தலைமையாசிரியர் திரு மந்திரம் அவர்களும் அன்புடன் உதவினார்கள். பரிசு பெற்ற தம்பி தங்கைகளின் பெயர்களோடு முதல் பரிசு பெற்ற கையெழுத்துக்களையும் உங்கள் பார்வைக்காக இங்கு வெளியிட்டிருக்கிறோம். பரிசுபெற்ற உங்கள் தோழர்களுக்கெல்லாம் வாழ்த்துக் கூறிப் பாராட்டுவோம்.

23—6—74

சென்னை—31

ஆசிரியர்



முதல் பரிசு

மா. கண்ணன்
பதினொன்றும் வகுப்பு 'அ' பிரிவு
அரசினர் உயர்நிலைப் பள்ளி
நாமக்கல் (தெற்கு)

வெ. சேகர்
பத்தாம் வகுப்பு 'பி' பிரிவு
அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி
சோழவந்தான்.

அர. நடராசன்
ஒன்பதாம் வகுப்பு 'ஆ' பிரிவு
அரசினர் உயர்நிலைப் பள்ளி
பு. புளியம்பட்டி, கோவை மாவட்டம்.

மு. சிவாஜி
எட்டாம் வகுப்பு 'இ' பிரிவு
அரசு உயர்நிலைப் பள்ளி
ஆனைமலை, கோவை மாவட்டம்

கே. ஆர். சுஜாதா ராணி
ஏழாம் வகுப்பு 'எஃப்' பிரிவு
நகராட்சி உயர்நிலைப்பள்ளி
கொரநாடு, மாயவரம் - 609001.

எஸ். சக்கர்பாணி
ஆறும் வகுப்பு
இ. ஆ. உயர்நிலைப் பள்ளி
திருவிடைமருதூர்.

இரண்டாம் பரிசு

கா. பாலகிருஷ்ணன்
பதினொன்றும் வகுப்பு 'அ' பிரிவு
அரசினர் உயர்நிலைப் பள்ளி
ஆனைமலை, பொள்ளாச்சி வட்டம்.

க. சுகுமார்
பத்தாம் வகுப்பு 'பி' பிரிவு
மகாஜன உயர்நிலைப் பள்ளி
மேட்டுப்பாளையம் - 641301.

எஸ். மரகதம்
ஒன்பதாம் வகுப்பு
பெண்கள் உயர்நிலைப் பள்ளி, லால்குடி.

சி. சரோஜினி
1-34, இரா. வேலூர்
கண்டக்காம்பாளையம் போஸ்ட்
உடுமலை வட்டம்.

த. முத்துநாராயணன்
ஏழாம் நிலை 'அ' பிரிவு
அரசினர் உயர்நிலைப் பள்ளி
வேட்டவலம், வ. ஆ. மாவட்டம்.

ஜி. வி. பரமேஸ்வரி
ஆறும் வகுப்பு
பழனியம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
கோபிசெட்டிபாளையம்.



தாயின் அன்பு

அருந்ததி

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார்; அவருக்கு ஒரு மனைவி. அவள் இறக்கும் நேரம் வந்தது. ''என் மகள் கண்கலங்காமல் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டினாள். சாகும் நிலையில் இருப்பவர்கள் கேட்பதைச் செய்வதாகத் துக்கம், பிரிவு இவற்றின் காரணமாக உடனடியாக ஒப்புதல் தந்துவிடுவார்கள்.

''குழந்தையை நான் என் கண்ணின் மணியாகக் காப்பாற்றுவேன்'' என்று வாக்குறுதியளித்தான் ராஜா.

காலத் தேர் உருண்டது. ராஜா மறுமணம் செய்து கொண்டான். சின்ன ராணி முதலில் குழந்தையிடம் அன்போடும், பாசத்தோடும் நடந்து கொண்டாள். காலம் போகப் போக ராஜா மகள் மீது புதிய ராணிக்குக் கோபம் வந்தது. வெறுப்பு மூண்டது. மனம் மாறினால் எதையும் செய்வார்கள் பெண்கள்.

சின்னஞ் சிறு பெண்ணை ராஜா மகளைப் பட்டினி போட்டாள் இளைய ராணி!

பசி தாங்காத ஐந்து வயதுச் சிறுமி அரண்மனையின் ஒரு பக்கமாக இருந்து அழுதாள். அழுத காரணத்தால் அடி கிடைத்தது.

அரண்மனைத் தோட்டத்துக்குப் — போய் அங்கே அமர்ந்து அழுதாள். மாதுளம் மரக் கிளையில் ஒரு கிளி உட்கார்ந்திருந்தது.

''அழாதே, குழந்தாய்! உனக்குப் பசித்தால் நல்ல நல்ல பழங்கள் கொய்து கொண்டு வருகிறேன்'' என்றது. குழந்தைக்கு ரொம்ப மகிழ்ச்சி. சிறிய தாயார் பட்டினி போட்டால் மாதுளம் மரத்தடியில் போய் உட்காருவாள். கிளி வந்து பழங்களைக் கொடுக்கும்.

பட்டினி போட்ட மகள் அழாமல் புஷ்டியாக வளர்ந்து வந்தாள்! இதனைப் பார்த்த இளைய ராணிக்குக் கண்கள் உறுத்தின. குழந்தையை வேவு பார்க்கச் சொன்னாள். தாதி ஒருத்தி இந்த வேலையைச் செய்தாள்.

மறு நாள் வேவு சென்ற தாதி வந்து சொன்னாள்.

''அரசியாரே! பச்சைக் குழந்தை அழுது கொண்டு பசியால் துடிக்கும் போது பைங்கிளி ஒன்று ஆகாரம் கொண்டு வந்து கொடுத்தது. பழங்கள் வந்தன. வகை வகையான கனிகள் உணவாகக் கிடைத்தன!''

வந்தது ராணிக்குக் கோபம். ராஜாவின் அறைக்குப் போனாள். ''அரசே! என் சாளரத்தின் பக்கம் கிளி ஒன்று வந்து கத்துகிறது. குறி பார்த்து அம்பு எய்வதில் தாங்கள் வல்லவராயிற்றே...!'' என்று நிறுத்தினாள்.

''காட்டு, அந்தக் கிளியை!'' என்றான் மன்னன்.

மாதுளம் மரத்தில் இருந்த பச்சைக் கிளியைக் காட்டினாள் இளைய ராணி.

மறு நாள் குழந்தை மாதுள மரத்தின் பக்கம் வந்தது. ''கிளியே!.... கிளியே! உன்னை என் தந்தை கொல்லப் போகிறார். நீ ஓடிப் போய்விடு'' என்றாள்.

பேசும் கிளி, ''நான் கிளியாக இருக்கிறவள் இனி ஆடாக மாறிவிடுவேன். நீ பயப்படாதே!'' என்றது.

ராஜா ஏதோ ஒரு கிளியைக் கொன்றான். கொண்டு வந்தான். ராணியிடம் கொடுத்தான்.

மீண்டும் குழந்தை பட்டினி போடப்பட்டாள். அரண்மனையைவிட்டு, தோட்டத்தை விட்டு வெளியே வந்தாள். ''வா, மகளே, வா. வயிறாரப் பால் கறந்து சாப்பிடு'' என்றது ஆடு. குழந்தைக்குப் பசி நீங்கிற்று.



பசிக்கும்போதெல்லாம் அந்த ஆட்டைத் தேடிப் போய்ப் பசியைப் போக்கிக் கொண்டாள்.

மீண்டும் வந்தது ஆபத்து! ''குழந்தை இளைக்காமல் கொழு கொழு என்று இருக்கிறதே'' என்று புழுங்கினாள் இளைய ராணி. தாதி வந்தாள். வேவு பார்க்கத் தொடங்கினாள். ஓர் ஆடு காட்டும் அன்பை ராணிக்குச் சொன்னாள் வேவுக்காரத் தாதி.

உடனே அரசி ராஜாவிடம் போனாள். ''என் அறைப் பக்கமாக ஆடு ஒன்று கத்துகிறது. என்னால் தூங்கவே முடியவில்லை. அதன் சத்தலை நிறுத்தக் கத்தியை எடுங்கள்'' என்றாள்.

இந்தச் சேதியை ஆட்டிடம் சொன்னாள் சின்னப் பெண்.

''பெண்ணே, என்னருமைக் கண்ணே! நீ பயப்படாதே! நான் தோட்டத்தில் தானியம் தரும் செடியாக இருப்பேன். அதில் ஒரு தானியம் எடுத்துத் தின்றாலே உன் பசி ஆறிவிடும்'' என்றது ஆடு.

மீண்டும் பழைய கதை. குழந்தையைப் பட்டினி போட்டும் கொழுகொழு என்று இருப்பதைக் கண்ட ராணிக்கு ஆத்திரமான ஆத்திரம்.

வேவுகாரத் தாதியை அனுப்பினாள். அவளும் உண்மையை அறிந்து வர்து சொன்னாள். அந்தத் தானியச் செடியை வெட்டி எறியும்படி ராஜாவிடம் வேண்டிக் கொண்டாள் ராணி.

ராஜாவே மண்வெட்டியுடன் தோட்டத்துக்குப் போனான். செடியை வெட்டினால் அது இரும்பு போலக் கடினமாக இருந்தது. ராஜாவுக்கு வியப்பும் பிரமிப்பும் ஏற்பட்டது.

''அரசே!'' என்றது செடி.

''யார் நீ?'' என்று கேட்டான் மன்னன்.

''நான் உங்கள் முதல் மனைவி. நான் சாகும்போது நம் குழந்தையைக் கண் கலங்காமல் வளர்க்க வேண்டினேன்.... வாக்குத் தந்தீர்கள். மறுமணம் செய்து கொண்டீர்கள். இளைய ராணி வந்தாள். உங்கள் இதயத்தை மாற்றினாள். என் குழந்தை பசிக்கும் பட்டினிக்கும் ஆளானாள். அவளை நான் கிளி போல் வந்து காத்தேன்; ஆடாக வந்து பாலூட்டினேன்; தானியச் செடியாக வந்து பசி போக்கினேன். நீங்கள் அரசர்! மறு தாரத்தின் பேச்சைக் கேட்டுக் குழந்தையை வளர்க்க முடியவில்லை! அரசர்பாடே இப்படி என்றால் ஏழை மக்கள் எப்படி மறுதாரத்தின்



பேச்சைக் கேட்டு, பெற்ற குழந்தையை வளர்ப்பார்களோ?'' என்றது செடி.

மறுகணம் மாயமாக மறைந்தும் விட்டது.

மன்னன் மனம் திருந்தினான்: மகளை அன்போடு வளர்த்தான்! தாயின் அன்பு மகளைக் காத்தது.





கிரகங்கள்

யுரானஸ்

கிருஷ்ணவேணி

சூரியப் பாதையில் ஏழாவது கிரகமாக விளங்குவது யுரானஸ். இந்தக் கிரகத்தைச் சமீபத்தில்தான் கண்டுபிடித்தார்கள். ஆதியில் சூரியப் பாதையில் சனிக் கிரகம் வரையில்தான் இருப்பதாக நம்பினார்கள். இந்தக் கிரகத்தைக் கண்டவர் பெரிய வான சாஸ்திரியல்ல. அமெச்சூர் அஸ்ட்ரானமர். **வில்லியம் ஹெர்ஸ்செல்** என்று பெயர். அமெச்சூரானாலும் அற்புதமான அறிவும் ஆர்வமும் கொண்டவர். தூரதரிசினிக்கான கண்ணாடிகளைத் (லென்ஸ்) தாமே சாணைபிடித்துத் தேய்த்துத் தயாரித்தார். தூரதரிசினியையும் தம் முயற்சியாலேயே உருவாக்கினார். ஏழு அங்குல அபர்ச்சர் உடைய அந்தத் தூரதரிசினியின் மூலம் 1871ம் ஆண்டு மார்ச் மாதம் இங்கிலாந்தில் வான மண்டலத்தை அவர் ஆராயும் போது ஜெமினி நட்சத்திரக் கூட்டத்தினருகில் ஒரு விநோதமான பொருளைக் கண்டார். அது அருகில் உள்ள நட்சத்திரங்களை விட உருவத்தில் பெரிதாக இருந்தது. ஆனால் ஜ்வலிக்காமல் மங்கலாகத் தோன்றியது. தொடர்ந்து பல இரவுகள் அதை ஆராய்ந்தபோது அது தன் இடத்திலிருந்து கொஞ்சம் விலகி இருப்பதையும் உணர்ந்தார். இதனால் ஹெர்ஸ்செல் இதை ஒரு வால்நட்சத்திரமோ என்று முதலில் சந்தேகித்தார். தம் புதிய கண்டுபிடிப்பை அறிவித்துவிட்டு அதைப் பற்றி ஆராயும் பொறுப்பை வானியல் வல்லுநர்களின் பொறுப்பில் விட்டார்.

கிரீன்விச் ஆப்ஸர்வேட்டரியில் **டாக்டர் நேவில் மாஸ்கலின்** என்பவரின் தலைமையில் இந்தப் புது நட்சத்திரம் ஆராயப்பட்டது. அதன் நகரும் பாதை கணக்கிடப்பட்டது. அதன் பாதை வட்ட வடிவமாக அமைந்ததினால், அதுவும் ஒரு கிரகமே என்பது உறுதியாகியது. வில்லியம் ஹெர்ஸ்செல் சூரியப் பாதையில் ஏழாவது கிரகத்தைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவரானார். தாம் ஒரு புதிய கிரகத்தையே கண்டுபிடித்துவிட்டோம் என்று பூரித்துப் போன வில்லியம் அந்தக் கிரகத்தை **ஜார்ஜியம் ஸைடஸ்** — ஜார்ஜியன் நட்சத்திரம்—என்று பெயரிட்டார். அப்போது இங்கிலாந்தை ஆண்ட மூன்றும் ஜார்ஜைக் கௌரவிப்பதற்காக அவர் பெயரையே அதற்குச் சூட்டினார்.

ஹெர்ஸ்செல் தம்முடைய குறிப்புகளிலும் கடிதப் போக்குவரத்திலும் இந்தக் கிரகத்தை ஜார்ஜியன் என்றே குறிப்பிட்டார். ஆனால் மற்ற வான சாஸ்திரிகள் வேறு வேறு பெயர்களை அதற்குக் கொடுத்தார்கள். ஜெர்மனியிலிருந்த **பெர்னோயிலி** என்பவர் இதற்கு **ஹைப்பர்க்ரோனியஸ்** (சனிக் கிரகத்துக்கு மேலிருப்பது) என்றார்.

நெப்டியூன், மினர்வா, ஸைபெலி என்று இப்படியாகப் பல பெயர்களை வைக்க யோசனை கூறினார்கள். பெயர் சூட்டும் படலத்தின் முடிவில் வெற்றி கண்டவர் ஜெர்மனியைச் சேர்ந்த **போடே** (*Bode*)



என்பவர்தான். இவர்தான் இக் கிரகத்துக்கு **யுரானஸ்** என்று பெயரிட்டவர். புராதன கிரேக்கர்களின் புராணப்படி கடவுளர்களின் தந்தையாகக் கருதப்படுபவர் யுரானஸ். யுரானஸின் மூத்த மகனின் பெயர் க்ரோனஸ் அதாவது சாடர்ன்.

மற்றக் கிரகங்களைப் போலவே யுரானஸுக்கும் சந்திரன்கள் இருக்கலாம் என்று அனுமானித்தார் ஹெர்ஸ்செல். அதன்படி பொறுமையோடு அயராது உழைத்தார். அதன் பலன் 1787ல் இருபது அடி அபார்ச்சர் கொண்ட டெலஸ்கோப்பின் உதவியால் ஆராய்ந்து இரண்டு சந்திரன்களைக் கண்டார். இவற்றுக்கு முறையே **ஓபரான், டிட்டானியா** என்று பெயரிட்டார். மேலும் ஆராய்ந்தபோது மற்ற கிரகங்கள் தன் இருசில் சுழலுவதற்கும் இக்கிரகம் தன் இருசில் சுழலுவதற்கும் வித்தியாசம் இருப்பதைக் கண்டார். ஒவ்வொரு கிரகத்தின் இருசும் செங்குத்தான நிலையில் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் கொஞ்சம் சாய்ந்திருக்கும். ஆனால் யுரானஸ் தன் இருசில் நேர் செங்குத்தான கோணத்தில் சுழலவில்லை என்று ஆதாரங்களுடன் கூறினார் ஹெர்ஸ்செல். இதனால் யுரானஸில் நீண்ட இரவுகளும் நீண்ட பகல்களும் ஏற்படுகின்றன என்றார்.



யுரானஸ் கிரகத்தின் மிக அருகேயுள்ள அதன் சந்திரனிலிருந்து பார்த்தால் யுரானஸின் தோற்றம் எப்படி இருக்கும் என்பதையே இங்கு காண்கிறீர்கள். வலப்பக்கத்திலுள்ள பிரகாசமான நட்சத்திரம்தான்சூரியன். யுரானஸ் கிரகம் கொஞ்சம் கோழிமுட்டை வடிவிலிருப்பதைப் பாருங்கள்.

யுரானஸ் பற்றிய செய்திகள் என்ன என்ன? இது தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ளப் பதினொரு மணியாகிறது. அதாவது யுரானஸில் ஒரு நாளைக்குப் பதினொரு மணி. சூரியனை இது ஒரு முறை சுற்றி வர எண்பத்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. சாதகமான வானிலையில் இந்தக் கிரகத்தைச் சாதாரணமான கண்களாலேயே காணலாம். அத்தனை பிரகாசமானது இது. டெலஸ்கோப் மூலம் இதைக் காணும் போது வெளிர் கடல் பச்சைத் தட்டைப் போலத் தோற்றம் அளிக்கும்.

சூரியப் பாதையில் உள்ள மூன்றாவது பெரிய கிரகம் யுரானஸ். இதன் குறுக்களவு 29,500 மைல்கள். சூரியனிலிருந்து 1785 மிலியன் மைல்களுக்கு அப்பால் உள்ளது இக்கிரகம். இதற்கு ஐந்து சந்திரன்கள் உண்டு.


சீதோஷ்ண நிலை எப்படி? கற்பனையே செய்ய முடியாத பயங்கரமான குளிர். மைனஸ் 310 டிகிரி ஃபாரன்ஹீட்.


தண்ணீர் உண்டா? இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

கிரகத்தின் மேற்பரப்பின் தன்மை எப்படி? தெரியவில்லை.

பசுமை உண்டா? தாவரங்களுக்கான சாத்தியக்கூறுகளே கிடையாது. சூரிய உஷ்ணம் இந்தக் கிரகத்திலும் படுகிறது. ஆனால் மிக மிகக் குறைவு. வீர்யமற்ற தன்மை.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிவுகளின்படி யுரானஸ் கிரகத்தின் மையப் பகுதி 14,000 மைல்கள் குறுக்களவுக்கு உறுதியான பாறைகளால் ஆனதாக







வும் அதைச் சுற்றி மேலே 6000 மைல்கள் கனத்துக்குக் கெட்டியான பனிக்கட்டி மூடியபடியும் இருக்கும் என்கிறார்கள். இந்தப் பனிப் படலத்துக்கும் மேலே 3000 மைல்கள் கனத்துக்கு விஷவாயுக்கள் சூழ்ந்திருக்கின்றனவாம்.

ஹெர்ஸ்செல், யுரானஸ் கிரகத்துக்கு இரு சந்திரன்களைக் கண்டு பிடித்தபிறகு பின்னால் வந்த ஆராய்ச்சியாளர் அந்தச் சந்திரன்களின் சுற்றுப் பாதையை ஆராயும்போது இன்னும் சில சந்திரன்களும் இருக்கக்கூடும் என்ற முடிவுக்கு வந்தார்கள். 1851ல் **லாசெல்** என்ற புகழ் பெற்ற ஆங்கில வான சாஸ்திரி இரண்டு சந்திரன்களைக் கண்டுபிடித்தார். இவைகளுக்கு முறையே **ஏரியல். அம்ப்ரியல்** என்று பெயரிட்டார். 1948ல் **கூய்பர்** என்ற அமெரிக்க வானியல் அறிஞர் ஐந்தாவதாக ஒரு சிறு சந்திரனைக் கண்டார். இதற்கு **மிராண்டா** என்று பெயரிட்டார். மற்ற நான்கு சந்திரன்களைவிட ஐந்தாவது சந்திரனான மிராண்டா யுரானஸ் கிரகத்தின் மிக அருகே ஒட்டினாற்போல் இருக்கிறது.

யுரானஸ் கிரகம் அதன் உருவத்துக்கு எடை குறைவானது. ஆனால் ஜூபிடர் சாடர்ன் கிரகங்களை விட அடர்த்தியானது. பூமியின் அடர்த்தியில் நாலில் ஒரு பங்கும் நிலத்திலுள்ள நீரைப் போல் 1.36 மடங்கு அடர்த்தியும் கொண்டது இக்கிரகம். இதிலிருந்து பூமியைப்போல் உருவத்தில் 64 மடங்கு பெரிய கிரகமானாலும் பூமியின் கனத்தைப் போல் பதினைந்து மடங்குதான் கனமுடையது யுரானஸ்.

இதன் மேற்பரப்பில் மெதேன் என்ற விஷ வாயு சூழ்ந்திருக்கிறது. அமோனியா இருக்க வேண்டும். ஆனால் அது வாயு நிலையில் இருக்காது. கெட்டியாக உறைந்த நிலையிலிருக்கும்.

இந்தக் கிரகத்தின் மையப் பகுதியில் வெள்ளையாக ஒரு கோடு தெரிவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இலேசான புகை போன்ற வளையங்களையும் கண்டிருக்கிறார்கள்.

யுரானஸ் கிரகத்துக்கு மனிதன் போக முடியுமா ? இன்றைய ஆராய்ச்சி நிலையில் வேகத்தை மனிதன் வெற்றி கொள்ளுவானானால் ஒரு கிரகத்திலிருந்து மற்றொரு கிரகத்துக்குப் போகும் வாய்ப்புக்களும் வல்லமையும் பெருகுமானால் இன்னும் ஆறு வருஷங்களில் யுரானஸில் மனிதனின் காலடி பதியலாம்.

சோவியத் நாட்டிலுள்ள எல்லாச் சிறுவர்களும் கண்டிப்பாகப் பள்ளிக்குச் செல்கின்றனர். கட்டாயக் கல்வி அமுலில் இருப்பதால், நாடுமுழுவதிலும் உள்ள சிறுவர்கள் இலவசக் கல்வி பெறுகின்றனர். பஸ் நிலையங்களிலோ, ஓட்டல்களிலோ சர்ச்சுகளின் அருகிலோ, நடுத் தெருக்களிலோ எங்கானாலும் சரி, கையில் உண்டியல், காகிதக் குப்பை அல்லது பிச்சைப் பாத்திரம் ஏந்திய சிறுவர்கள் அந்நாட்டில் கிடையாது.

ஒவ்வொரு மாணவனும் ஏதாவதொரு பொழுது போக்கில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். மீன் பிடித்தல், நாய், பூனை, கிளி, புறு, அணில் போன்ற பிராணிகளை வளர்த்தல் — தபால் தலைகள், வர்ணக் கார்டு, பாட்ஜுகள், நாணயங்கள், பேனாக்கள், சிறு பொம்மைகள் போன்றவற்றைச் சேகரிப்பது — இசை, நடனம், விளையாட்டு போன்ற கிளப்புகளில் சேர்ந்து பயிற்சி பெறுதல் — புகைப்படம் எடுத்தல், பனிச் சறுக்கு விளையாட்டில் ஈடுபடுதல், வர்ணம் தீட்டுதல், வரைதல், காகிதப் பூக்கள், பொம்மைகள் செய்தல், சித்திர வேலைப்பாடு செய்தல் போன்ற கை வேலைகளில் ஈடுபடுதல், புத்தகம் படித்தல் போன்ற பலவற்றில் கவனம் செலுத்துகிறார்கள். இப்படிப்பட்ட பொழுது போக்குக்கு அதிகம் செலவாகுமே என்று கவலைப்படத் தேவையில்லை. சிறுவர்களுக்கான பொருட்கள் அனைத்தும் அந்நாட்டில் அரசின் ஆதரவுடன் மலிவாகவே விற்கப்படுகின்றன.





மேல் படத்தில்: சிறுவர்கள் என்ன? தாய்மார்களும் தங்களுக்கு விருப்பமான பிராணிகளை வளர்க்கிறார்கள். தனது ஆசைக் கரடியின் வாயில் "சாக்லேட்" வைப் போடுகிறார் தான்யா இவானோ என்ற சோவியத் பெண்மணி.

கீழ்ப் படத்தில்: தான் வளர்க்கும் ஃபோம்கா என்ற வெள்ளெலியுடன் சிறுவன் இலியா மகாவோவ்.

நன்றி: சோவியத் தகவல் நிலையம்


ஜெய் ஹனுமான்
கதை : ரா. கணபதி
சித்திரம்: வினு
14
ஹேமையின் இருப்பிடம் அறிந்த இந்திரன்
மயனைத் வஜ்ராயுதத்தால் வதைத்து ஹேமையைப்
கொள்ளுகிறான். அப்போது ஸ்வயம்பிர
நான் இங்கேயே இருந்து தவம் செய்து முக்தி பெற விரும்புகிறேன். அனுமதியளிக்க வேணும்.
அப்படியே ஆகட்டும். இந்தத்தன் இடத்துக்குத் தவறிப்போய் யார் வந் லும் உன் துணையின்றி அவர்கள் வெளியேற முடியாது என்று வரமளிக்கிறேன்.
... ஆகவே நீங்கள் எல்லோரும் கண்களை மூடிக்கொள்ளுங்கள். நான் சொல்லும்போது கண்ணைத் திறவுங்கள். நீங்கள் இந்த ரகசிய இடத்திலிருந்து வெளியேறி இருப்பீர்கள்.
ஸ்வயம் பிரபையிடமிருந்து விடைபெற்று வெ
வருகிறார்கள் வானரர்கள்.
இது தான் தென்
ராம காரியமாக
நீங்கள் செல்லவே
டிய பாதை இது



ஸ்வயம் பிரபை மறைந்தாள்.
இதுவா வழி? கடலல்லவா? கடலைக் கடப்பது எப்படி?
இங்குள்ள மாமரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. ஆகவே இது சித்திரை மாதம்... நாம் புறப்பட்டது கார்த்திகை மாதம்....
சுக்ரீவராஜா நமக்குக் கொடுத்தது ஒருமாத கெடு. வழி தவறிச் சுற்றியதில் நான்கு மாதங்கள் ஆகிவிட்டன.
இதுவரை சீதா தேவியைப் பற்றிய தகவல் ஏதும் தெரியவில்லை. தோல்வியோடு திரும்பி மன்னரின் கையால் சாவதைவிட இங்கேயே உண்ணாவிரதமிருந்து உயிரை விடுவோம்...... அதுதான் சரி.
ஆனால் கடவுளிடம் நம்பிக்கையுள்ள மாருதி தனிமையில் ராமஜெபம் செய்து கொண்டிருந்தார். மற்ற வானரர்கள் பிராயோபவேசம் செய்யத் தொடங்கினர்.
வானரங்களின் பேச்சில் ஜடாயு என்ற பெயர் அடிபடுகிறது. அதைக் கேட்டு இறகிழந்த கழுகு ஒன்று அங்கே வருகிறது.
என் பெயர் சம்பாதி! நீங்கள் பேசிக் கொண்ட ஜடாயு என் சொந்தத் தம்பி.
நானும் என் தம்பி ஜடாயுவும் ஒருசமயம் சூரியனை நோக்கிப் போகும்போது சூரியகிரணங்களின் கொடுமையிலிருந்து என் தம்பியைக் காக்க என் இறகுகளை அவன் மீது குடையாகப் பரப்பியபடி பறந்தேன். அதனால் என் இறகுகள் கருகி நான் இங்கு விழுந்து விட்டேன். கண் பார்வையும் மங்கி விட்டது.
தொடரும்



வேண்டியது எது?

நமக்கு வேண்டுவது எந்தக்கை?
நம்பிக்கை : நம்பிக்கை!
அளவிடவேண்டுவது எந்தக்கால்?
மரக்கால் : மரக்கால்!
உண்மையுணர்த்துவது எந்தக்கண்?
இடுக்கண் : இடுக்கண்!
பெருக்கவேண்டியது எந்தவாய்?
வருவாய் : வருவாய்!
பிடுங்கவேண்டுவது எந்தப்பல்?
சோம்பல் : சோம்பல்!
எரிக்கவேண்டியது எந்தத்தேகம்?
சந்தேகம் : சந்தேகம்!

டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி



மனிதனும் வாழ வேண்டும்

தேன்போல் இனிய சொல்ல வேண்டும்;
தென்னைபோல் நன்றி காட்ட வேண்டும்;
மான்போல் மானம் உணர வேண்டும்;
மாடுபோல் உழைக்கத் தெரிய வேண்டும்.

காகம்போல் கூடி வாழ வேண்டும்;
கன்றுபோல் துள்ளி யாட வேண்டும்;
மேகம்போல் எங்கும் செல்ல வேண்டும்;
மழைபோல் நன்மை பொழிய வேண்டும்.

குயில்போல் பாடிக் களிக்க வேண்டும்;
குன்றுபோல் நிமிர்ந்து நிற்க வேண்டும்;
மயில்போல் ஆடி மகிழ வேண்டும்;
மலர்போல் மணமும் வீச வேண்டும்.

வெண்மைபோல் உள்ளம் தெளிய வேண்டும்;
விண்போல் நெஞ்சம் விரிய வேண்டும்;
மண்போல் பொறுமை பூண வேண்டும்;
மனிதனும் என்றும் வாழ வேண்டும்.

தி. பட்டிராஜன்





வருங்காலத் தலைவன்

மேலைநாடு சென்று கல்வி பயிலப்போகிறேன்
விஞ்ஞானத்தில் புலமைபெற்றுத் திரும்பப்போகிறேன்
வேலையில்லாத் திண்டாட்டத்தை விரட்டப்போகிறேன்
வீதிக்கொரு ஆலையிங்கு நிறுவப்போகிறேன்

நாடுவிட்டு நாடுசென்று படிக்கப்போகிறேன்
நல்லதெல்லாம் கொண்டுவந்து குவிக்கப்போகிறேன்
பாடுபட்டு நாடுயர உழைக்கப்போகிறேன்
பட்டினியை நாட்டைவிட்டு விரட்டப்போகிறேன்.

கப்பலேறிக் கடல்கடந்து படிக்கப்போகிறேன்
கல்வியிலே கரையைக்கண்டு திரும்பப்போகிறேன்
ஒப்பில்லாத தலைவனாக விளங்கப்போகிறேன்
ஊருக்கெல்லாம் நன்மைசெய்து உயரப்போகிறேன்.

எ. ந. கணபதி

காற்றாடி


பறக்குது வானில் காற்றாடி
பம்பரம் போலச் சுழன்றாடி
விரிக்குது சிறகைப் பறந்தோடி
விரும்புது மனமோ அதைநாடி!

பச்சை மஞ்சள் காற்றாடி
பாலர் விரும்பும் காற்றாடி
உச்சி மீதே பறந்திடுமாம்
ஊதா வெள்ளைக் காற்றாடி!

போட்டி போடும் காற்றாடி
பொழுது போக்கும் காற்றாடி
வீட்டு மெத்தை மேலேறி
வாண்டுகள் விடுவார் காற்றாடி!

வானைத் தொடவே காற்றாடி
வண்டி நாலில் பறக்கிறது!
நானும் அதனுடன் போகணுமே!
நிலாவில் இறங்கி நடக்கணுமே!

பி. வி. கிரி





கோழிக் குஞ்சுகள்!

எங்கள் வீட்டுக் கோழிக்கு
எழிலாய்க் குஞ்சு ஏழுண்டு
எங்கும் இதுபோல் வேறில்லே
ஏழும் காணில் ஏழுவகை!

பட்டுப் போலே ஒருகுஞ்சு
பாசிப் போலே ஒருகுஞ்சு
சிட்டுப் போலே ஒருகுஞ்சு
சின்னத் தலையுடன் ஒருகுஞ்சு!

தாவிப் போகும் ஒருகுஞ்சு
தட்டித் தின்னும் ஒருகுஞ்சு
சேவல் கொத்திட வந்தாலோ
சீறிப் பாயும் ஒருகுஞ்சு!

பாழும் குப்பை மேய்ந்தாலும்
பகலில் ஊரைத் திரிந்தாலும்
ஏழும் தாயின் காலடியை
என்றும் விட்டுப் போகாதே!

'நிலீபன்'

புனிதமாக்குவேன்!

படிக்கப் போகிறேன்—நான்
படிக்கப் போகிறேன்!
படித்த பின்னே நாட்டுக்காக
உழைக்கப் போகிறேன்—நான்
உழைக்கப் போகிறேன்! (படிக்கப்)

பலசரக்குக் கடைகள்வைத்துப்
பொருள் வழங்குவேன்!—அதில்
கலப்படங்கள் கலந்திடாமல்
கவனஞ் செலுத்துவேன்!—நான்
கவனஞ் செலுத்துவேன்! (படிக்கப்)

வழக்குரைஞர் பட்டம்பெற்று
வாதஞ் செய்யுவேன்!—திசை
கிழக்குமேற்கு மாறினாலும்
கீழ்மை செய்திடேன்—நான்
கீழ்மை செய்திடேன்! (படிக்கப்)

மருத்துவர்க்குப் பட்டம்பெற்று
மாறப் போகிறேன்—புவி
வருத்தும் நோய்கள் நீக்கக்கிராம
வாசஞ் செய்யுவேன்!—நான்
வாசஞ் செய்யுவேன்! (படிக்கப்)


செய்யுந்தொழிலிற் கவனஞ்செலுத்திச்
சிறப்புக் கொள்ளுவேன்! — அதில்
பொய்யும்புரட்டும் நீக்கிமிக்கப்
புனித மாக்குவேன்! — நான்
புனித மாக்குவேன்! (படிக்கப்)

காரை கே. எஸ். மதிஒளி



அவள் மட்டும் வந்திராவிட்டால்

"லல்லி"



அலைகடலின் அழகில் மனத்தைப் பறிகொடுத்தபடி உட்கார்ந்திருந்த ஆனந்தி, பாஸ்கரனின் குரலைக் கேட்டுத் திரும்பினாள். ''ஆனந்தி! இதோ பார், புதையல்!'' என்று உணர்ச்சி பொங்கக் கூறிக் கொண்டு உள்ளங் கையை விரித்தான் பாஸ்கர். ஒரு பிடி மணலிடையே ஒரு பொருள் காட்சி அளித்தது. ஆனந்தியின் முகத்தில் அவன் எதிர்பார்த்த ஆச்சரியம் தோன்றவில்லை. அதற்குப் பதில் அவள் பார்வையில் அலட்சியம் தோன்றி மறைந்தது. ''ஹூம்! பிரமாதப் புதையலாக்கும் இந்த அஞ்சு பைசா? இதைக் கண்டு பிடித்த பெருமைக்கா என்னைக் கூப்பிட்டாய்?'' — அவள் அலட்சியமாகப் பேசுவதைக் கண்டு பாஸ்கரன் அவளை ஒருகணம் உற்றுப் பார்த்தான். அவனுடைய மாமா பெண்தான் அவள்; இருந்தும் அவனிடம் அவளுக்கு எப்போதும் ஓர் அலட்சியம். ''பீச்சுக்கு வா! வீட்டில் போரடிக்கிறது'' என்று பிராணனை வாங்கினாயே என்று வந்தேன். நீ வழக்கம்போல் அலையைப் பார்த்து ரசிக்க ஆரம்பித்துவிட்டாயே தவிர, கூட வந்திருக்கும் என்னோடு ஒரு வார்த்தை பேசினாயா?'' பாஸ்கரன் பொருமுவதைக் கண்டு ஆனந்தியின் மனம் மாறியது. அவனை வருந்த வைத்து வேடிக்கை பார்ப்பது அவளுக்கு ஒரு பொழுதுபோக்கு.

''பாஸ்கர்! பாஸ்கர்! நீ என்ன, இதற்குப்போய் இப்படிவருத்தப்படறே? அஞ்சு பைசா விஷயத்தைப் புதையல்னு சொன்னாயே, அப்படி என்ன பிரமாதம் இது என்றுதானே கேட்டேன்? இதற்கு இவ்வளவு கோபமா?'' — ஆனந்தியின் சுபாவம் பாஸ்கரனுக்குப் புரிந்தது. அவன் அதுவரை அவள் மீது கொண்டிருந்த கோபத்தை மறந்தான். ''ஆனந்தி! நீ இந்த அஞ்சு பைசாவை அலட்சியப்படுத்தலாம். ஆனால் இந்த அஞ்சு பைசா எனக்கு என்றைக்கும் நினைவில் பதியும் அளவுக்கு ஒரு சம்பவத்தை நிகழ்த்திவிட்டது'' என்று பீடிகை போட்டான் பாஸ்கரன். ஆனந்தி ஏற்கெனவே அவன் மனத்தைப் புண்படுத்தியிருப்பதை நினைந்து அவன் சொல்லப் போவதைப் பொறுமையோடு கேட்க முன் வந்தாள்.

''மாமா எனக்குக் கிரிக்கெட் மாட்ச் பார்க்கப் போகும்போது 'லஞ்ச்'க்குக் காசு கொடுப்பது உனக்குத் தெரியுமல்லவா ஆனந்தி?''

''ஆமாம், தெரியுமே!''

''அதே போல் அன்றும் என்னிடம் இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார். நானும் வாங்கிக் கொண்டேன். அன்றைக்கென்று புதிதாகத் திறந்த 'வஸந்த விஹார்'க்குப் போனேன். புது ஹோட்டலாதலால் ஏகக் கும்பல். அந்தச் சமயத்தில்தான் என் நண்பன் பிரணதார்த்தியை அங்கு பார்த்தேன். அவனையும் வற்புறுத்தி டிபன் சாப்பிட அழைத்தேன். இருவருமாக அங்கு சாப்பிட்டோம். பஸ்ஸுக்குப் போக வேண்டிய சமயத்தில் அவன் மசால் தோசையை அவசர அவசரமாக விழுங்கிவிட்டு, காப்பிகூட வேண்டாம் என்று எனக்கு முன்பே கிளம்பிவிட்டான். சர்வர் எனக்கு மட்டும் காப்பி கொண்டு வந்தான். காப்பியைச் சுவைத்துக் குடித்தபின், சர்வர் பில்லை நீட்டினான். அதைப் பார்த்தேனோ இல்லையோ என் இதயமே நின்றுவிடும் போலாகிவிட்டது. ஆம், சரியாக இரண்டு ரூபா ஐந்து பைசாவுக்குப் பில் போடப்பட்டிருந்தது. என்னிடம் இருந்தது சரியாக இரண்டே ரூபாய் தான். ஐந்து பைசாதான் அதிகம் தேவை!

''ம்.... கூட இருந்து டிபன் சாப்பிட்டவன் ஓடி விட்டான்! உன்பாடு திண்டாட்டமாகி விட்டது!'' என்று ஆனந்தி அனுதாபம் தெரிவித்தாள்.

'' பில் தொகைக்குக் குறைவது ஐந்தே பைசாதான். என் உடையைப் பார்த்து யாரோ பெரிய இடத்துப் பிள்ளை என்று நினைப்பவர்களுக்கு இந்த நெருக்கடி வெளியே தெரிந்தால்.....? புது ஹோட்டல்காரனிடம் கடன்

சொல்லக்கூடிய பெரிய தொகையும் அல்ல! ஆனால் அதைக் கொடுக்காமல் வெளியே போகவும் வழியில்லாத நிலை. யாரிடமாவது கேட்டு வாங்கலாம் என்றால் தெரிந்தவர் யாருமில்லை. நான் தவித்த தவிப்பைப் பார்த்து ஒரு சிலர் தங்களுக்குள் சிரிப்பதையும் நான் பார்த்துவிட்டேன். நானும் ஷர்ட் பாக்கெட், பாண்ட் பாக்கெட் பர்ஸ் எல்லாவற்றிலும் பார்த்தேன். பாழும் அஞ்சு பைசா காசு அப்போது என்னிடம் இல்லாமல் நான் பட்ட அவஸ்தையை எப்படிச் சொல்வது? பில்லை எடுத்துக் கொண்டு போய் முதலாளியிடம் கொடுக்கத் துணிவுமில்லை. யாவரும் என்னைப் பார்த்தே கேலி செய்வது போன்ற உணர்ச்சி. இரண்டு ரூபாய்க்கு மேல் பில் ஆகிவிடவா போகிறது என்றுதான் பிரணதார்த்தியைக் கூப்பிட்டேன். அவன் நிம்மதியாகப் போய் விட்டான். நான் தவித்துக் கொண்டிருந்தேன்.''

அன்று நான் மிரள மிரள விழிப்பதைக் கண்டு உன்னைப்போல் ஒரு பெண் சிரித்தபடி என்னை நோக்கி வந்தாள். எப்படியோ என் நிலைமையை உணர்ந்து உதவ வந்தவளைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன்.


அவளிடம் என்ன பேசுவதென்றே புரியவில்லை. நான் அவளையே பார்த்து விழிப்பதைக் கண்டு, ''இந்த சர்வர் எப்பவும் இப்படித்தான். இதோ, பாருங்க அண்ணா? எனக்குப் பார்சல் கட்டிக் கொடுத்தவன் அவசரத்தில் உங்க பில்லை என்னிடம் கொடுத்து விட்டு என் பில்லை உங்களிடம் மாற்றிக் கொடுத்து விட்டான். அவன் கூப்பிட்டது உங்க காதிலே விழாமல் நீங்க நிக்கறீங்க! உங்கக் குழப்பத்தைப் பார்த்து நானே அதைக் கேட்டு வாங்கிக்கலாம்னு உங்களைப் பார்க்க அவசரமாக வந்தேன். இந்தாங்க உங்க பில்'' என்று சொல்லித் தன் கையிலிருந்த பில்லை என்னிடம் கொடுத்தாள்



அந்தப் புதிய பெண். எனக்குப் போன உயிர் மீண்டும் வந்தது. நான் உடனே என் கையில் இருந்த பில்லை அவளிடம் கொடுத்துவிட்டேன். என் நன்றியைத் தெரிவிப்பதற்குள் அவள் போய் விட்டாள். சொன்னால் நீ நம்பமாட்டாய். என் பில்லில் சரியாக ஒரு ரூபாயும் எண்பத்தைந்து பைசாவும் தான் போடப்பட்டிருந்தது. மறுவிநாடி கல்லாவில் பில்லையும் பணத்தையும் கொடுத்து விட்டுக் குனிந்த தலை நிமிராமல் அங்கிருந்து வெளியேறி விட்டேன்....? அந்தச் சம்பவத்தை நினைத்தால் இன்றுகூட உடல் சிலிர்க்கிறது! பார்க்கப் போனால் அஞ்சு பைசா விஷயம்!'' என்று பாஸ்கர் சொல்லி முடித்ததும், பீச்சில் நொண்டிப் பிச்சைக்காரன் ஒருவன் அவர்கள் முன் கையேந்தி நின்றான்.

''ஆனந்தி! இதோ நான் கண்டு எடுத்த புதையலை இவனுக்குக் கொடுத்துவிடுகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே, அந்தப் பிச்சைக்காரனின் குவளையில் அந்த அஞ்சு பைசாவைப் போட்டான். ''எதையும் சின்னது என்று அலட்சியம் செய்யக் கூடாது தான்! இன்று இந்த அஞ்சு பைசா அவனுக்கு ஓரளவு பசியாற நிச்சயம் உதவும் பாஸ்கர்!'' என்று ஆனந்தியும் ஆமோதித்தாள்.


சொல்லுங்களேன்



அருகே உள்ள படத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள படங்களில் ஒன்றே ஒன்று மட்டும் வேறுபட்டு இருக்கும். அந்த வேறுபட்ட படத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். உதாரணமாக, பசு, ஆடு, நரி, நாய் இப்படி நான்கு படங்கள் இருக்குமானால் அதில் நரி வேறுபாடானது. எப்படி? அது காட்டு விலங்கல்லவா? இந்த முறைப்படி பக்கத்திலுள்ள கட்டங்களில் வேறுபட்டது எது என்பதைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

விடை: 1. சைக்கிள் (இது ஓடப் பெட்ரோல் தேவையில்லை.) 2. சாக்பீஸ் (இதனால் சுவடியில் எழுத முடியாது) 3. வாத்து (இது நீரில் நீந்தும் பறவை) 4. மீன். இதன் முதுகில் கெட்டியான ஓடு இல்லை. 5. முரசு (இது தோல் கருவி. மற்றவைகள் கம்பிக் கருவிகள்) 6. முக்காலி (இதற்கு மட்டும் மூன்றே கால்கள்) 7. சுத்தி (இதனால் எதையும் வெட்ட முடியாது.) 8. தாமரை (இது நீரில் மலர்வது) 9. கடிகாரம் (இது ஓட மின்சாரம் தேவையில்லை) 10. ஆலமரம் (இதற்கு விழுதுகள் இருக்கின்றன)

தெரியுமா?



1223. நான்காவது பாலம் (Fourth Bridge) என்று ஒரு நாட்டில் ஒரு பாலம் இருக்கிறது. அது எந்த நாடு தெரியுமா?

1224. இன்றைய கிலோமீட்டர் அன்றைய மைலில் எத்தனையில் ஒரு பாகம்?

1225. அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ் தன்னுடைய கடற் பிரயாணத்தை எந்த ஆண்டில் மேற் கொண்டார்?

1226. தங்க வாசல் பாலம் (Golden gate Bridge) ஆக்லாந்தில், சிட்னியில் லாஸ்ஏஞ்சல்ஸில், ஸான்பிரான்ஸிஸ்கோ வில் இருக்கிறது. இவற்றில் எது சரி?

1227. கோபி பாலைவனம் இருப்பது. கிழக்கு ஆசியாவில் — வடக்கு ஆப் பிரிக்காவில் — பாரசீக வளைகுடாவின் அருகில் — மத்திய அமெரிக்காவில் — இவற்றில் எது சரி?

1228. விக்டோரியா நீர்வீழ்ச்சி கீழ்க்கண்ட எந்த நதியில் ஏற்படுகிறது ஸாம்பஸி, நிகர், காங்கோ, நைல்.

1229. தண்ணீர் கீழுள்ள அளவு களில் எதில் உறையும்? 0 டிகிரி F, 32 டிகிரி C, 32 டிகிரி F, 10 டிகிரி C.

1230. கீழ்க்கண்ட நகரங்களில் ஒன்று துறைமுகப்பட்டினமல்ல. அது எது? பம்பாய், விசாகப்பட்டினம், பாட்னு, கொச்சி.

1231. கரீபின் கடலையும் பசிபிக் பெருங்கடலையும் இணைக்கும் கால்வா யின் பெயர் தெரியுமா?

1232. பெரு, பராகுவே, மெக் ஸிகோ, பிரேஸில் — இவைகளில் ஒன்று தென் அமெரிக்காவில் இல்லை. அது எது?

1233. தென் துருவத்துக்கு மிக அருகே உள்ள தேசம் — ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, சிலி, தென் ஆப்பிரிக்கா— இவற்றில் எது?

1234. கிறிஸ்துமஸ் தீவு எந்தக் கடலில் உள்ளது தெரியுமா?

1235. பெரு நாட்டின் தலை நகர் எது?

1236. வோல்கா நதி எந்தக் கடலில் சங்கமமாகிறது?

1237. பெஸிமிஸ்ட் (Pessimist) என்று யாரைக் குறிப்பார்கள்?

1238. ஜெட் புரொபல்ஷனைக் கண்டுபிடித்தது யார்?

1239. கிரகங்களுக்குள்ளேயே மிக வும் உஷ்ணமான கிரகம் எது?

1240. நள்ளிரவில் சூரியன் தெரி யும் பிரதேசங்கள் உலகில் எங்கு உள்ளன?

1241. ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, அரேபியா — இவற்றில் புலிகள் உள்ள பிரதேசம் எது?

1242. மில்லினர் (Milliner) என் றால் தெரியுமா? கோடீசுவரன் என் பீர்கள். அதுதான் இல்லை.


1243. டான்யூப் நதி சங்கமமாவது மத்திய தரைக் கடலில், பால்டிக் கட லில், ஆர்க்டிக் கடலில், கருங் கடலில்— இவற்றில் எது சரி.

1244. பூமிக்கு மிக அருகே உள்ள கிரகம் எது?

1245. துறவு பூண்ட கிறிஸ்துவப் பெண்கள் (Nuns) வசிக்குமிடத்துக்கு என்ன பெயர் தெரியுமா?

1246. பாரதத்தின் புண்ணிய நதி யான பிரம்மபுத்திரா பாரதத்தைத் தவிர வேறு ஒரு நாட்டையும் வளப் படுத்துகிறது, அது எந்தநாடு தெரியுமா?

தெரியுமே!



1223. ஸ்காட்லாந்தில். 1224. ஒரு மைலில் 5/8 பாகம். 1225. 1492ம் ஆண்டு. 1226. ஸான்பிரான் ஸிஸ்கோவில் இருக்கிறது. 1227. கிழக்கு ஆசியா வில். 1228. ஸாம்பஸி நதியில். 1229. 32 டிகிரி ஃபாரன் ஹீட்டில். 1230. பாட்னு. 1231. பனாமா கால்வாய். 1232. மெக்ஸிகோ. 1233. சிலி நாடு. 1234. பசிபிக் கடலில். 1235. லிமா (Lima). 1236. காஸ்பியன் கடலில். 1237. எப்போதும் மோசமான விளைவுகளையே எதிர்பார்க்கும் ஒருவரை 1238. சர் பிராங்க் விட்டில். 1239. மெர்க்குரி. 1240. வட (ஆர்டிக்) தென் (அண்டார்க்டிக்) துருவப் பிரதேசங்களில். 1241. ஆசியாவில். 1242. குல்லாய்களைச் செய்து விற்பவனுக்கு மில்லினர் என்று பெயர். 1243. கருங்கடலில். 1244. வீனஸ் எனப்படும் சுக்கிரன். 1245. கான்வென்ட். 1246. முன்பு கிழக்கு பாகிஸ்தானாக இருந்த இன்றைய பங்களாதேஷ் நாட்டை. ■

★ விரிந்து பரந்து கிடக்கும் நம் பாரத தேசம் மிகவும் தொன்மையானது. பல்வேறு இனம் மொழி கலாசாரங்களைக் கொண்டது. இந்தியா பல அந்நிய அரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்திருக்கிறது. பல்வேறு நாகரிகங்களைக் கண்டு அவற்றோடு ஒன்றிப் போயிருக்கிறது. பல படையெடுப்புக்களையும் அதனால் இங்கு வேரூன்றிய கலாசாரங்களையும் விழுங்கி ஜீரணித்துக் கொண்டிருக்கிறது. இத்தனை மாறுபாடுகள் இந் நாட்டில் ஏற்பட்ட போதும் எவ் வகையிலும் பாதிக்கப்படாத பழங்குடிகள் நம் பாரதத்தில் ஆங்காங்கே பரவிக் கிடக்கிறார்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்கள் வாழும் முறைகளை ஆராய்ந்து அறிந்த டாக்டர் சசி அவர்கள் அப்பழங் குடிகளைப் பற்றிக் கோகுலத்தில் அவ்வப்போது சுவையான சிறு கட்டுரைகளை எழுதுவார்கள். அந்த வரிசையில் முதலாவது இது.

— ஆசிரியர்

கழைக்கூத்தாடியின் ஆட்டம் முடிவடைந்து விட்டது. குழந்தைகள் கண்ணனும் கீதாவும் வீட்டுக்குள் ஓடி வந்தனர். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஒரே சமயத்தில் வித்தைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர். நான் ஒரு வழியாக அவர்களைச் சமாதானப்படுத்தி, 'இரண்டு பேரும் ஒரே சமயத்தில் பேசினால் என்ன செய்வது?' என்றேன்.

முதலில் கண்ணனைப் பேசச் சொன்னேன். ''இம்மாம் வித்தைகளைச் செய்து காட்டினானே, அவனுக்கு எங்கிருந்து இந்த மந்திர சக்தியெல்லாம் கிடைத்தது, அப்பா?'' என்றான்.

'' அதிலே மந்திரம் கால், மதி முக்கால். பெரும்பாலான வித்தைக்காரர்கள் தந்திரத்தாலேயே செப்படி வித்தைகள் செய்து காட்டுகின்றனர். இருந்தாலும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள பைகர்கள் என்னும் பழங்குடி மக்கள், மந்திரத்தால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை என்று நம்புகிறார்கள்'' என்றேன் நான்.

உடனே கீதா குறுக்கிட்டு, ''அந்தப் பழங்குடி மக்களுக்குப் பைகர்கள் என்று எப்படிப் பெயர் வந்தது?'' எனக் கேட்டாள்.

''அது ஒரு கதை. கடவுள் உலகத்தை சிருஷ்டித்தார். அப்பொழுது உலகம் ஸ்திரமாக இல்லாமல் இங்கும் அங்கும் ஆடித் தவிக்க ஆரம்பித்துவிட்டதாம். உடனே வாயுவைக் கூப்பிட்டு உலகத்தை

மத்தியப் பிரதேசத்தின் பைகர்கள் -



ஒரு நிலைக்குக் கொண்டு வரக் கடவுள் கட்டளையிட்டார். ஆனால் வாயுவினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிறகு பலம் பொருந்திய பீமசேனனும் மது மயக்கத்தில் இருந்ததால், தோல்வியுற்றான். ஆதலால், நங்கா பைகா என்பவனை அழைத்து உலகைக் கட்டுப்படுத்துமாறு கடவுள் உத்தரவிட்டார். நங்கா பைகா பூமியின் மேல் கால் வைத்த உடனேயே, உலகத்தின் உருவம் உருண்டை வடிவாகியது; ஆட்டமும் நின்றுவிட்டது. இவ்வளவு சக்தி கொண்ட நங்கா பைகாவைக் கண்ட துஷ்ட மிருகங்களும் ஓடி ஒளிந்து கொள்ளுமாம். அந்த நங்கா பைகாவின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்தான் நாங்கள் என்கிறார்கள் பைகர்கள்.''

''உங்களுக்கு இந்தக் கதையைச் சொன்னது யார்?'' என்றாள் கீதா.

''சித்து பைகா என்ற பழங்குடி ஒருவன் எனக்கு இதைத் தெரிவித்தான்'' என்ற நான் தொண்டையைக் கனைத்துக்கொண்டு மேலும் கூறினேன். ''பைகர்களிடம் இருக்கும் சூனியக்காரர்கள் எந்த வியாதியையும் போக்கி விடுவார்களாம். வானத்தில் கூடும்



டாக்டர் எஸ். எஸ். சசி

மேகத்தையும் விரட்ட முடியுமாம், இவர்களால். திருட்டுப் போன சொத்து எந்த இடத்தில் இருக்கிறது என்பதையும் கண்டு பிடித்து விடுகிறார்களாம்.''

''அப்படின்னா மந்திரம் செய்துதான் எல்லாப் பைகர்களும் பிழைக்கிறார்களா!?'' என்றான் கண்ணன்.

''பைகர்கள் எல்லாரும் சூனியக்காரர்கள் அல்ல. அவர்கள் விவசாயமும் செய்கிறார்கள். ஜூம் என்ற விசித்திரமான முறையில் இவர்கள் பயிர் செய்கின்றனர். அதன்படி பைகர்கள் ஏரினால் நிலத்தை உழுவதில்லை. ஏரினால் உழுதால் பூமாதேவிக்குக் காயம் ஏற்பட்டுவிடும் என்று பைகர்கள் நினைப்பதே காரணம். அவர்கள் முதலில் மரங்களையும் செடி கொடிகளையும் நிலத்தின் மீது வெட்டித் தள்ளுகிறார்கள். அவை காய்ந்தவுடன் தீப்பற்ற வைக்கிறார்கள். யாவும் எரிந்து சாம்பலாகிவிடுகிறது. சாம்பலில் விதைகளை விதைக்கிறார்கள். சாம்பலை காற்றும் மழையும் அடித்துச் சென்று விடுவதால் பைகர்கள் அடிக்கடி இடம் பெயர்ந்து சென்று விவசாயம் செய்கிறார்கள்.''

இதுவரை முழங்காலைக் கட்டிக்கொண்டு கதை கேட்டுக் கொண்டிருந்த கண்ணன் எழுந்து நின்று, ''பைகர்களின் குழந்தைகளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே. அவர்களும் எங்களைப் போல் ஸ்கூலுக்குப் போவாங்களா?'' என்றான்.

''பைகர்களின் குழந்தைகள் பெற்றோர்களுடன் சேர்ந்து அடிக்கடி இடம் மாறுகின்றனர். அதனாலும், முழு வயிற்றுக்கு உணவு கிடைக்காத காரணத்தாலும் பள்ளிக்குப் போவதில்லை. சில குழந்தைகள் காடுகளில் பீடி இலைகளைப் பொறுக்கி அதனால் வரும் பணத்தைக் கொண்டு ஒரு வழியாக வயிற்றைக் கழுவுகிறார்கள். இருந்தாலும், கஷ்டத்தை மறக்க அவர்கள் நடனமாடுவதில் அடிக்கடி ஈடுபடுகிறார்கள். பைகா ஆண்களும் பெண்களும் கைகளைக் கோர்த்துக் கொண்டு வேகமாக நடனம் ஆடுகின்றனர். இதுமட்டுமல்ல, குறி பார்த்து அம்பு எய்வதிலும் பைகர்கள் வல்லவர்கள்.''

தமிழாக்கம்: **வி. கோவிந்தசாமி**

வாடா மலர்



உனக்குப் பிறர் எதைச் செய்தால் நீ விரும்ப மாட்டாயோ, அதைப் பிறருக்குச் செய்யாதே.

கன்பூஷியஸ்.

கல்வியால் அலங்கரிக்கப்பட்டவனாயினும் துஷ்டனாய் இருப்பவனோடு சேரக்கூடாது. இரத்தினத்தினால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் பாம்பு பயப்படத்தக்கதல்லவா? **- பர்த்ருஹரி.**

கடிகாரம் காலத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. ஒன்பது முப்பதுக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகும். பள்ளி இறுதி ஆண்டு மாணவர்கள் போட்ட சத்தத்தால் மூன்றாவது உலக யுத்தம் வந்தாலும் வந்துவிடுமோ என்று மற்ற வகுப்பு மாணவர்கள் எண்ணும்படியான எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருந்தது! ஒருவன் நாற்காலியை விட்டு நாற்காலிக்குத் தாவிக் கொண்டிருந்தான். இன்னொருவன் படிப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தான்! அவனைப் படிக்க விடாதபடி இன்னொருவன் சத்தம் போட்டு வாய்க்கு வந்தபடி கத்தித் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தான். கடிகாரம் ஒன்பது முப்பதை நெருங்கியதும் கடைசி மணி அடித்தது. ஆசிரியர் வந்துவிடுவார் என்ற காரணத்தால் மாணவர்கள் எல்லோரும் அவரவர் இடத்தில் அமர்ந்தனர். ஆசிரியர் இராமநாதன் உள்ளே நுழைந்தார்! முக மலர்ச்சியுடன், மாணவர்களைப் பார்த்துக் கொண்டு, அவர்கள் அளித்த வணக்கத்தையும் ஏற்றுக் கொண்டு அமர்ந்தார்! புன்னகையுடன் அமர்ந்தவர் பின்னால் இருந்த கரும் பலகையைப் பார்த்துத் திடுக்கிட்டார். கரும் பலகையில் ஒரு மனிதர் படம் வரைந்து 'அறுவையின் மறு பெயர் இராமநாதன் என்று எழுதப்பட்டிருந்தது! மனத்துக்குள் மாணவர்களின் குறும்பை நினைத்துச் சிரித்துக் கொண்ட இராமநாதன் கண்களில் கோபத்தைக் காட்டினார். அவரும் ஒரு காலத்தில் மாணவராக இருந்தவர் தானே!

"யார் இப்படி எழுதியது?"

குரலில் கடுமையை வரவழைத்துக் கொண்டே கேட்டார். பதில் இல்லை. மறுபடியும் கேட்டார். பதில் இல்லை!...

"ராமு யார் இப்படி எழுதியது?"

இப்படி ஒரு கேள்வியைத் தன்னைக் கேட்பார் என்று ராமு எதிர்பார்க்கவே இல்லை! யார் அப்படி எழுதியது என்று அவனுக்குத் தெரியும்! ஆனால் எப்படிக் கூறுவது? அவன் ஆசிரியரிடம் எப்படிப் பொய் சொல்லுவான்?

"முத்துதான் சார், இப்படி வரைந்தான்!" திக்கித் திணறி வந்தது பதில்!

இராமநாதன் பார்வை முத்து பக்கம் திரும்பியது. அந்தப் பார்வையைத் தாங்கமுடியாமல் தலைகுனிந்தான் முத்து!

" முத்து....நீ நன்றாகப் படம் போடுவாய் போல் இருக்கிறது! இன்னும்



கொஞ்சம் முயற்சிசெய்தால் சிறப்பாகப் படம் போடலாம்! நீ ஓவியத்தைக் கற்றுக் கொள்ளும் முன் ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்!''

இராமநாதன் குரலில் சூடு ஏறியது..

''இனி நான் பாடம் எடுக்கும் நேரங்களில் வகுப்பில் இருக்கக் கூடாது! என்னை மதிக்காத மாணவன் எனக்குத் தேவையில்லை! நீ என்று மன்னிப்புக் கேட்கிறாயோ அப்போதுதான் உள்ளே உனக்கு இடம். நீ போகலாம்.''


சிறிது நேரம் நின்று கொண்டிருந்த முத்து வெளியில் சென்றான். அப்போது ராமுவை அவன் பார்த்த பார்வை? அப்பப்பா.....!

பள்ளிக்கூடம் விட்டு எல்லாரும் சென்று கொண்டிருந்தார்கள். ராமு தன் நண்பர்களுடன் சென்று கொண்டிருந்தான். போக்குவரத்து அதிகம் இல்லாத பாதை அது! வேகமாக வந்து ராமுவின் முதுகில் அடித்தான் முத்து. ராமு தன்னை உணர்ந்து கொள்ளும் முன் மாறி மாறி அடித்தான். அடி பலமாக விழுவதற்குள் ராமு கீழே விழுந்துவிட்டான். அதற்குள் ராமுவின் நண்பர்கள் முத்துவைப் பிடிக்க ஓடினார்கள். ஆனால் முத்து வேகமாக ஓடினான். அவன் பாதை ஓரத்தைக் கடக்கும் போது வேகமாக வந்தகார் ஒன்று அவன் மீது மோதியது. ''ஆ!'' என்று அலறியபடி முத்து கீழே விழுந்தான்! அவன் மீது மோதிய கார் நிற்கவில்லை. உடனே பறந்து விட்டது.

* * *

''வெரிகுட், ராமு. நீ பொறுப்பு உணர்ந்த பையன். தம்பி, உன் சமயோசித அறிவைப் பாராட்டுகிறேன். நீ உடனே ரிக்ஷா பிடித்து முத்துவை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்திராவிட்டால் அவன் உயிருக்கு ஆபத்தாய் முடிந்திருக்கும். ஏராளமான இரத்தம் வெளியேறிவிட்டது. இப்போது பயம் இல்லை. ஓர் உயிரைக் காப்பாற்றிய பெருமை உன்னைச் சேர்ந்தது தம்பி!'' என்றார் டாக்டர்.

''நீங்கள் என்னை ரொம்பப் புகழ்கிறீர்கள் சார்! என்னால் முடிந்த உதவியைச் செய்தேன் அவ்வளவுதான்!''




திருப்பத்தூர் நாராயணன்

அதற்குள் முத்துவின் பெற்றோர்கள் செய்தி அறிந்து ஆஸ்பத்திரிக்கு விரைந்து வந்தனர்.

''தம்பி! நீ கொடுத்த கார் எண்ணை வைத்து முத்துவை மோதிவிட்டுச் சென்ற காரை மடக்கியாகிவிட்டது! உன்னுடைய புத்திகூர்மையைப் பாராட்டுகிறேன்.''

கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர். மெல்லக் கண் திறந்தான் முத்து. நடந்த உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தான் அவன். உள்ளத்தின் தெளிவைக் காட்டுவது போல் அவன் கண்களில் கண்ணீர் மன்னித்து விடு என்பது போல் இருந்தது அந்தப் பார்வை. மன்னித்து விட்டேன் என்று கூறுவது போல் ராமுவின் கண்களிலும் கண்ணீர்! அந்த இரண்டு பேர்களின் கண்ணீர் சொன்ன கதை இது.

மந்திரக்கம்பளம்



6

உணவு விடுதியில் உள்ளோர், அங்கு பொருள்கள் தானாகக் கிளம்பி அந்தரத்தில் மிதந்து மறைந்த அதிசயத்தைக் கண்டு பிரமை பிடித்தவர்களாகிக் கலகலத்துப் போனார்கள். ஆனால் கீர்த்தியோ எவ்விதப் பதற்றமுமில்லாமல் நிதானமாக உணவைச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பெரிய மனிதர் உள்ளே வந்தார். பிரபுவைப் போலக் காட்சி யளித்த அவரைக் கண்டதும் உணவுக் கடை உரிமையாளர் தம் இருக்கையிலிருந்து எழுந்து அவரை வரவேற்றார். அத்தனை கௌரவப்பட்ட அவர் ரொம்பவும் கர்வத்துடன் யாரையுமே காணாதவர் போல மூலையிலிருந்த ஒரு காலி இடத்துக்குப் போனார். அவர் கண்களுக்கு அது காலியாகத் தெரிந்தது. அங்கு இளவரசன் கீர்த்தி அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதை அவர் காணவில்லை. அது கீர்த்தி அணிந்திருந்த குல்லாயின் மகிமை.

''யாரப்பா அங்கே... இதோ இந்த மேஜையைச் சுத்தம் பண்ணு. யாரோ பஞ்சத்திலடிபட்ட பட்டிக்காட்டான் ஏகமாகச் சாப்பிட்டுப் போயிருக்கிறான்'' என்று மேஜை மீது கிடந்த ஏராளமான பாத்திரங்களைப் பார்த்துக் கூறிக் கொண்டே மேஜை முன்னாலிருந்த நாற்காலியில் அமர்ந்தார். அடுத்த விநாடி....?

அந்தப் பெரிய மனிதர் கீர்த்தியின் மடியில் போய் உட்கார்ந்தார். கீர்த்தி அந்த இருக்கையில் உட்கார்ந்திருப்பது அவரது ஊனக் கண்களுக்குத் தெரியவில்லை. இரட்டைநாடியான அவர் மூட்டையாகக் கீர்த்தியின் மடியில் போய் உட்கார்ந்ததும் கீர்த்திக்குக் கடுங் கோபம் வந்து விட்டது. அந்த மனிதரைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு வேகமாக எழுந்திருந்தான். அந்த வேகத்தில் அவன் தலையிலிருந்த குல்லாய் நழுவிக் கீழே விழுந்தது. அடுத்த விநாடி....?

வாண்டுமாமா



தன் முன்னே திடீரென்று தோன்றிய விசித்திரபுரி இளவரசரைக் கண்டதும் அந்தப் பெரிய மனிதரின் உடல் கிடுகிடுவென்று ஆடியது. குரல் நடுங்கியது.

''என்னை மன்னியுங்கள் இளவரசே! மன்னியுங்கள். நீங்கள் அங்கு உட்கார்ந்திருப்பதைநான் கவனிக்கவில்லை.'' இப்படி அவர் சொன்னது கீர்த்தியின் கோபத்தைக் கொழுந்து விடச் செய்தது.

''முட்டாள்தனம். உன் கண்களில் படாமலிருக்க நானென்ன எறும்பா, ஐயா? இத்தனை பெரிய உருவம் உம் பார்வையில் படவில்லையானால் நீர் மதுவின் மயக்கத்தில் இருக்கிறீர் என்றாகிறது. உமது நாட்டு இளவரசரை நீர் அவமானப்படுத்தி விட்டீர். இதற்குரிய வெகுமதியை நீர் அடைந்தேயாக வேண்டும்'' என்று ஆத்திரத்துடன் கூறிய கீர்த்தி அதே வேகத்தில் கீழே கிடந்த தன் குல்லாயை எடுத்துத் தலையில் அணிந்து கொண்டு வேகமாக அந்த உணவு விடுதியிலிருந்து வெளியேறுவதற்குத் தயாரானான். குல்லாயைத் தலையில் அணிந்து கொண்ட அந்தக் கணமே கீர்த்தியும் மறைந்து போனான். நடுங்கிக்கொண்டிருந்த அந்தப் பெரிய மனிதரின் நிலையோ இப்போது இன்னும் மோசமாகப் போயிற்று. இளவரசரின் திடீர்த் தோற்றம், அவரது கோபம், திடீர் மறைவு எல்லாமாகச் சேர்ந்து அவரைக் குழப்பி விட்டன. ரொம்பவும் கர்வமாக உள்ளே வந்த அவர் நிலை இப்போது பரிதாபமாக இருந்தது. அங்கிருப்போரிடமெல்லாம், ''நான் இளவரசர் இங்கிருந்ததைக் கவனிக்கவில்லை. தவறு என்மீதுதான். நான் அவர்மீது போய் அப்படி உட்கார்ந்திருக்கக் கூடாதுதான்'' என்று புலம்பினார். ஆனால் உணவு விடுதியில் உள்ளவர்களோ அங்கு இளவரசர் வந்ததைத் தாங்கள் பார்க்கவே இல்லையே என்றார்கள். ''தலைநகரிலிருந்து இவ்வளவு தூரம் அவர் ஏன் இங்கு வரவேண்டும்? வருவதற்கான அவசியமே இல்லையே'' என்றார்கள்.



கீர்த்தியோ தான் இப்படியெல்லாம் அலட்சியப்படுத்தப்படுவதற்கும் அவமானப்படுவதற்கும் தனது தகப்பனார் தான் காரணம் என்ற முடிவில் உணவு விடுதி முதலாளியின் இருக்கையருகில் போய் ''உமது நாட்டு இளவரசருக்கு நீங்கள் காட்டும் மரியாதையும் மதிப்பும் இதுதானா ஐயா? உமது சாப்பாட்டுக் கடையில் உணவு சுவையாக இருக்குமென்று தலைநகரி விருந்து ஓடோடி வந்தவனுக்குத் தகுந்த வரவேற்புக் கொடுத்து விட்டீர்கள். இருக்கட்டும். இந்நாட்டின் மன்னராக நான் ஒரு நாள் வரத்தான் போகிறேன். அப்போது உங்களையெல்லாம் கவனிக்கிறபடி கவனிக்கிறேன்'' என்று சுடச் சுடப் பேசினான் கீர்த்தி. முதலாளியின் உடல் நடுங்கியது. விழிகள் பிதுங்கின. பீதியினால் பேச முடியாமல் பேந்தப் பேந்த விழித்தபடி நின்று கொண்டிருந்தார். குரல் வரும் திக்கில் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார். ஆனால் வெறும் வெளியைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை!

தான் மறைந்திருக்கிறோம் என்பது கீர்த்திக்கும் புரியவில்லை. கோபத்துடன் மந்திரப் பையினுள் கைவிட்டு மூன்று தங்க நாணயங்களை எடுத்து, மேஜை மீது வீசிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வேகமாக அங்கிருந்து வெளியேறினான். இத்தனை நேரம் உருவமில்லாமல் ஒலி மட்டும் கேட்டது. இப்போது தங்க நாணயங்கள் பொத்தென்று முன்னால் வந்து விழவே உணவு விடுதிக்காரர் அப்படியே கிலி பிடித்து மயங்கிக் கீழே விழுந்தார்.

கீர்த்திக்குக் கோபமோ ஆத்திரமோ வரவே வராது. இதுவரை அவன் இப்படிப்பட்ட மனநிலையில் ஒருபோதும் இருந்ததில்லை. மங்களகிரியின் பிரதான வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தான் விசித்திரபுரியின் பட்டத்து இளவரசன். அவரவரும் தம் தம் போக்கில் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் யாருடைய கண்களுக்கும் கீர்த்தி நடந்து செல்வது தெரியவில்லை. அதனால் சிலர் அவன் மீது மோதுவது போல மிக அருகே வந்தார்கள். கீர்த்தி தான் ஒதுங்கிக் கொண்டான். ''இந்த நாட்டு மக்களுக்குத் திடீரென்று என்ன வந்து விட்டது? கண் பார்வையே போய் விட்டதா? எதிரில் வருபவரைக் கண்டு ஒதுங்காமல் இப்படி வந்து மோதிக் கொள்ளுகிறார்களே?'' என்று எண்ணமிட்டான் கீர்த்தி. ''என்னைக் கண்டும் காணாதவர்களைப் போல இவர்கள் இப்படி நடந்து கொள்வ

சிரிக்கச் சிரிக்க

சாமா






தென்றால் அது மன்னருடைய கட்டளைக்குப் பயந்துதான் இருக்க வேண்டும்'' என்ற முடிவுக்கு வந்தான் அவன். இன்று போல என்றுமே அவன் மனம் சஞ்சலப்பட்டதில்லை. 'ஏன் இவர்கள் இப்படி?' என்ற வினாவே அவன் சிந்தனையில் வண்டாகக் குடைந்து கொண்டிருந்தது. அப்போது கீர்த்தியின் மீது ஒரு வயதான கிழவி வந்து மோதிக் கொண்டு அந்த அதிர்ச்சியில் அப்படியே நடு வீதியில் நிலை தடுமாறிக் கீழே விழுந்து விட்டாள். கீர்த்தி சிந்தனையுடன் வேகமாக நடந்து வருவது கிழவியின் கண்களுக்குத் தெரியாததினால் ஏற்பட்ட விபரீதம் இது. ஆனால் தன் மீது மோதிக் கொண்டு கீழே விழுந்தது கீர்த்திக்குத் தெரிந்தது. எப்போதுமே பெரியோர்களிடம் மரியாதையும் வயோதிகர்களிடமும், ஏழைகளிடமும் இரக்கமும் கொண்டவன் கீர்த்தி. கிழவி கீழே விழுந்த அதிர்ச்சியில் முழங்கையில் சிராய்ப்பு ஏற்பட்டு ரத்தம் கசிந்தது. உடனே கீர்த்தி கீழே உட்கார்ந்து கிழவியைத் தன்மீது தாங்கியபடி நிமிர்த்தி வைத்துக்கொண்டு அவள் கையிலிருந்து வழியும் இரத்தத்தைத் துடைக்கச் சட்டென்று தன் குல்லாயைக் கழற்றி அதனால் ஒற்றப் போனான். அடுத்த விநாடி கீர்த்தியின் உருவம் பிறர் பார்க்கும்படி தெரியலாயிற்று. தான் இளவரசனின் கைத்தாங்கலில் இருப்பதைக் கண்ட கிழவி ''மகாராசா! என்னை மன்னிச்சுடுங்க. நான் தெரியாத்தனமா உங்க மேலே மோதிட்டேன்'' என்று குழறினாள். இதற்குள் நடு வீதியில் பட்டத்து இளவரசன் மண்டியிட்டு அமர்ந்து ஓர் ஏழைக் கிழவிக்கு முதலுதவி செய்வதைக் கண்ட ஜனங்கள் ''இளவரசர் — இளவரசர் — கீர்த்திவர்மர்...! இங்கே எப்படி வந்தார்? எதற்காக... எப்போது....?'' என்று தலைக்குத் தலை பேசியபடியே அருகில் . இருந்தவர்கள் கலைந்து ஓடினார்கள், எட்ட இருந்தவர்கள் வந்து கூடினார்கள். அப்போது தான் தன்னைக் கண்டவர்களைப் போல மக்கள் பரபரப்படைவதைப் பார்த்த கீர்த்திக்கு எரிச்சலாக வந்தது. 'இத்தனை நேரம் என்னை லட்சியமே செய்யாத இவர்கள் இப்போது திடீரென்று சலசலப்படைவானேன்? இவர்களிடையே நான் இனி இருக்கவேகூடாது' என்று முடிவு செய்தவனாக கிழவிக்குத் தன் அன்பளிப்பாகச் சில பொற் காசுகளைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து போய்விட வேண்டும் என்று பைக்குள் கை விட்டான். அப்போது

பழைமை ஒழிக! புதுமை வாழ்க!







தான் பையிலிருந்த மூன்று தங்கக் காசுகளையும் உணவுக் கடை உரிமையாளரிடம் வீசிவிட்டு வந்தது நினைவுக்கு வந்தது. 'இதில் மூன்றே பொற்காசுகள்தானே இருந்தன. இனி அதில் ஏதும் இருக்காதே' என்ற ஏமாற்றம் மேலோங்கு முன் கீர்த்தியின் விரல்கள் நாணயங்களை ஸ்பரிசிக்கும் உணர்வில் வியப்படைந்தான். ''பைக்குள் மூன்றே காசுகள்தானே இருந்தன? அவைகளை நான் உணவுக் கடையில் கொடுத்து விட்டேனே. அப்படியிருக்க இதில் இப்போது இன்னும் மூன்று காசுகள் இருக்கின்றனவே, எப்படி?'' வியப்பு ஏற்பட்டாலும் அந்த வினவுக்கு விடை காணக் குழம்பிக் கொள்ளவில்லை அவன். தன்னிடமுள்ளது மந்திரப் பை. அதிலுள்ள நாணயங்கள் எத்தனை தடவை எடுத்தாலும் அப்படியே குறையாமல் இருக்கும் என்ற ரகசியம் அவனுக்குத் தெரியாது. கைக்கு வந்த அந்த மூன்று நாணயங்களையும் கிழவியின் கைக்குள் திணித்து விட்டுக் கூட்டத்தினரிடமிருந்து ஒதுங்கிப் போக எண்ணிக் குல்லாயை எடுத்துத் தலையில் அணிந்து கொண்டு வேகமாக நடக்கலானான். அதே சமயம் மக்களிடமிருந்து எழுந்த வியப்பொலியும் கிறீச்சென்ற கூச்சலும் அவன் செவிகளில் விழத்தான் செய்தன. ''ஏன் இப்படி இவர்கள்?'' என்று அவர்கள் செயலில் அதிசயமடைந்தான். ஆனால் அதற்குக் காரணம் தன்னிடம்தான் இருக்கிறது என்பதை அவன் உணரவே இல்லை!

விசித்திரபுரி இளவரசனை கீர்த்தியைக் காண வந்து கூடிய மக்கள் பீதியடைந்து சிதறி ஓடினார்கள். ''ஊரிலே யாரோ ஒரு மந்திரக்காரன் தோன்றி இருக்கிறான். திடீரென்று தோன்றுகிறான், பளீரென்று மாயமாக மறைகிறான் அந்த மாயாவி!'' என்று பேசிக் கொண்டு ஓடலானார்கள். நகரெங்கும் ஒரே பரபரப்பு. இதே பேச்சு.

சிந்தனை வயப்பட்டவனாக ராஜ பாட்டையில் நடந்து கொண்டிருந்தான் கீர்த்தி. அப்போது ஜாதிக் குதிரைகள் பூட்டிய ரதம் ஒன்று வெகு வேகமாக இவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. கொஞ்சமும் ஒதுங்காமல் நேரே தன்னை நோக்கியே கண் மண் தெரியாத வேகத்தில் வரும் ரதத்தைக் கண்டான் கீர்த்தி. ஆனால் ரதம் ஓட்டும் சாரதியின் கண்களுக்குக் கீர்த்தியின் உருவம் தெரியவில்லையே. அவன் எப்படி ஒதுக்கி ஓட்டுவான்? ஆனால் யானை ஏற்றம், குதிரை ஏற்றம், ரத ஓட்டம் ஆகியவைகளில் வல்லவனான கீர்த்தி சட்டென்று மின்னல் வேகத்தில் ஒதுங்கிக் கொண்டதோடு குபீரென்று அந்த ரதத்தின் பின் பக்கத்தை லாகவமாகப் பிடித்துத் தாவி அதில் தொற்றிக் கொண்டான். ''இத்தனை வேகமாகவும் வீதியில் உள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்யாமலும் தேரோட்டும் சாரதிக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். அத்துடன் இதனுள் வரும் பெரிய மனிதர்களையும் எச்சரிக்க வேண்டும்'' என்ற முடிவுடன் கீர்த்தி அந்த ரதத்தின் பின்னால் ஏறி நின்று சவாரி செய்து கொண்டு போனான். ரதம் போய்க் கொண்டிருக்கும்போதே மேலிருந்து குனிந்து உள்ளே நோக்கிய கீர்த்தி பிரமித்து விட்டான். ரதத்தினுள் ஒரு பெரியவருடன் ஓர் அழகிய பெண்ணும் இருந்தாள். கீர்த்தியே அவளை 'அழகி' என்று கருதினானென்றால் அவள் எப்படிப்பட்ட அழகியாயிருக்க வேண்டும்?

ரதம் ஓர் அரண்மனையின் முன்னால் போய் நின்றது. அதிலிருந்து அவர்கள் இறங்கினார்கள். அவர்களிடம் தான் சொல்ல நினைத்ததை அங்கேயே, ஒரு பெண்ணின் முன்னிலையில் கூறிச் சங்கடமான சூழ்நிலையை உருவாக்க விரும்பவில்லை கீர்த்தி. அவன் நாகரிகம் தெரிந்தவன். ஆகவே ரதத்தில் அந்தப் பெண்ணோடு வந்த பெரியவர் தனித்திருக்கும்போது அவருடன் அது பற்றிப் பேசலாம் என்று அவர்களுடனேயே அந்த அரண்மனைக்குள் நுழைந்தான். அவனைத்தான் பிறரால் பார்க்க முடியாதே. ஆகவே அவன் அவர்களுடன் உள்ளே நுழைவதற்கு எவ்விதத் தடங்கலும் இருக்கவில்லை.

அந்த அரண்மனையில் ஒரே கோலாகலம். ஏதோ ஒரு விழாவுக்கான ஏற்பாடு போலிருந்தது. அங்கு முன்பே பல பிரபுக்களும் பெரிய மனிதர்களும் வந்து கூடியிருந்தார்கள். அவர்களிடையே கீர்த்தி நடந்து போனான். அவனை யாருமே கவனித்ததாகத் தெரியவில்லை. (அவன் தலையில் மாயக் குல்லாயிருந்தது!) ஆனால் அவர்களுடைய சம்பாஷணை எல்லாமே அவனைப் பற்றியதாகத்தானிருந்தது.

''இளவரசனுக்குச் சரியான தண்டனைதான்...'' இப்படி ஒருவர்.

''இருந்தாலும் இத்தனை அறிவாளியாக இருக்க வேண்டாம். அதி புத்திசாலித்தனமும் ஆபத்துத்தான்.'' இது ஒருவரின் விமரிசனம்.

''நெருப்பு மிருகத்தோடு போராடத்தான் போகாமல் தம்பிகளை அனுப்பித்

தப்பித்துக் கொண்டானும்'' — இப்படியாக யாருமே கீர்த்திக்கு ஆதரவாகப் பேசவேயில்லை. ஒரே ஒருவரைத் தவிர. அது யார் தெரியுமா? அந்த அழகிதான். அவள் எப்படிப்பட்ட பேரழகி என்று சொல்லவில்லையே உங்களுக்கு?

நல்ல உயரம், ஒடிய ஒடியக் கொடி போல. ரோஜா நிறக் கன்னங்கள். தங்க மேனி. காதளவோடிய வண்டுக் கண்கள். அதில் கருணையும் அன்பும் குறும்பும் குழைந்திருந்தன. கருங்குழல் நெளி நெளியாகக் கடல் அலையை நினைவூட்டின. பசியை மறக்கச் செய்யும் மோகனச் சிரிப்பு. முத்துப் பல் வரிசை. மொத்தத்தில் அவள் ஒரு கைதேர்ந்த சிற்பி தன் கற்பனையைக் கொட்டி உருவாக்கிய சிற்பமாக விளங்கினாள்.

மற்றவர்கள் கீர்த்தியைப் பற்றிக் குறைவாகப் பேசும்போது அவள் அவனை ஆதரித்து வாதாடினாள்.

''விசித்திரபுரியின் இளவரசராகப் பிறந்தது அவருடைய துரதிருஷ்டம். நான் அவரைப் பார்த்ததில்லை. ஆனால் நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன். ரொம்ப அழகாக இருப்பாராமே? பெரிய வீரராமே, ரொம்ப இரக்க குணமுடையவராமே?'' என்று அந்த அழகி பேசுவதைக் கேட்கக் கேட்கக் கீர்த்திக்கு என்னவோ போலிருந்தது. தன்னைப் பற்றி ஒரு பெண் அதுவும் ஓர் அழகி புகழுவதைக் கேட்க மகிழ்ச்சியாகவுமிருந்தது அதே சமயம் வெட்கமாகவுமிருந்தது. ஆமாம், இந்த அழகிதான் என்னைப் பார்த்ததில்லை என்கிறாள். இங்குள்ள இத்தனை பேரில் யாருக்குமேயா என்னைத் தெரியவில்லை? அதோ, அதோ அவர்கள்....'' கீர்த்திக்குத் தெரிந்த பழக்கமான முகங்கள் பல அந்தக் கூடத்தில் இருந்தார்கள். ஏன் அவர்களில் ஒருவர்கூடத் தன்னைக் கவனித்தும் வந்து வரவேற்கவில்லை? அப்போதுதான் கீர்த்தியின் மூளையில் பளீரென ஒரு மின்னல் பாய்ந்தது. (தொடரும்)

ஓ! அப்படியா?

பட்டு: பாம்பு சட்டை உறிப்பது போலவா? இது என்ன?

வெட்டுக்கிளி: இது சட்டையுறிப்பல்ல. எலும்பு முறிப்பு. என் உடல் எலும்புகளை உடைத்துக் கொண்டால்தான் நான் நன்கு வளர முடியும்.


பட்டு: இதென்ன விந்தை.

வெட்டுக்கிளி: ஒரு தடவை உடைத்துக் கொண்டதும் புதிய எலும்புக்கூடு வளரும். கொஞ்ச நாளில் அதையும் உடைத்துக் கொண்டு விடுவேன். ஒரு தடவை அல்ல, ஐந்து தடவைகள் இப்படி என் எலும்புக்கூட்டை உடைத்துக் கொள்ளுவேன். உடைந்த உடல் உதவாது. உதறி விடுவேன்.

பட்டு: ஆச்சரியமாக இருக்கிறதே. உன்னைப் பற்றி இன்னும் நிறையச் சொல்லேன்!

வெட்டுக்கிளி: நான் முட்டையிலிருந்து பொரிந்து வெளி வரும் போது பெற்றோரைப் போலவே தானிருப்பேன், உருவத்தில் மட்டும் சிறியவனாக. என் எலும்புக் கூடு என்பது உடலின் மேல் பக்கமுள்ள கெட்டியான ஓடுதான். இந்த ஓட்டுக்கு உள்ளே தசைநார்கள் ஓட்டோடு இணைக்கப்பட்டிருக்கும். எங்களுக்கும் ரத்தம் உண்டு. ஆனால் அது உங்களதைப் போலச் சிகப்பாகவோ குழாய்கள் வழியாக ஓடும்படியோ இருக்காது. என் ரத்தம் நிறமற்றதோர் திரவம். இதில் என் உள் உறுப்புக்கள் மிதந்தபடி இருக்கும். நான் என் எலும்புக் கூட்டை உடைத்துக் கொள்ளுமுன் அதன் அடிப்பாகத்தில் புதிய கூடு வளர ஆரம்பித்திருக்கும். அது மிருதுவானதாக இருந்தாலும் விரிவடைந்து கெட்டிப்படும் வரை என் உடம்பையும் உயிரையும் (இதயத்தை) தாங்கிக் கொள்ளும் வல்லமை பெற்றதாக இருக்கும். கெட்டிப்பட்டதும் அதனால் விரிவடையவோ வளரவோ முடியாது. மிருதுவான நிலையில்தான் இது சாத்தியம். இதுதான் என் வளர்ச்சியின் ரகசியம்.

பட்டு: ஓ! அப்படியா?




RAAS/B/156 TAM



12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக்கணக்கை தாமே நடத்

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



REGISTERED NO. M. 9040 GOKULAM, Children's Fortnightly